
அருளோசை

திருவள்ளுவ
ஆண்டு 200
பங்குனி
1974 மார்ச்

சமய பாட போதனைத் திங்களிதழ்



தமிழ்நாடு தெய்விகப் பேரவை

சென்னை-600018

சிவனடியார் வரலாறு :

முனையடுவார் நாயனர்

—:×:—

எதிர்வரும் பகைகளை வென்று, நாட்டைப் பாதுகாத்த வளவர் நாடாகிய சோழ நாட்டில் நறுமணமிக்க மலர்ச்சோலைகளில் பொழிகின்ற செழுந்தேன், ஆற்று வெள்ளமெனப் பெருகி, மள்ளர்கள் உழும் வயல்களின் சேற்றிலும் மணங் கமழும் படியான வளம்மிக்க செல்வம் பொருந்திய திருநீடூர் உள்ளது. இவ்வூரில், விளங்கும் வளமைமிக்க, வேளாண் குடியைச் சேர்ந்த பெரியவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். இவர் சிவபெருமான்பால் கொண்ட பேரன்பினலே, உளங்கொள் திருத்தொண்டின் உரிமையோடு, தாம் பெற்ற வளமெல்லாம் சிவனடியார்க்கு மாருது அளிக்கும் வாய்மையுடையவர்.

எதிரிகளிடம் போர்முனையிலே தோற்றவர்கள் வந்து கூலி பேசினல், நடுவுநிலைமை தவருது, கூற்றும் ஒதுங்கும் ஆள்வினையோடு சென்று போரிட்டு வெற்றி கொண்டு, பெரும் நிதிக்குவை பெறுவார்.

இவ்வாருகப் பெற்ற நிதியெல்லாவற்றையும் சிவனடியார் சொன்ன சொன்னபடி நிரம்பக் கொடுத்து அவர்களுக்கு, நறுநெய், கறி, தயிர், பால், பழம் முதலியன கலந்து நல்லுணவு அளித்து அன்பின்நெறி பிறழாது வழித்தொண்டாற்றி வாழ்ந்து வந்தார். இவ்வகையில், பன்னெடுங்காலம் இவ்வுலகில் திருத்தொண்டினைத் தவருது செய்த செம்மைமிக்க அன்பின் நெறியால், உமையொரு பாகனுகிய சிவபெருமான் திருவருளால் பிரியா உரிமையுடன் சிவலோகப் பதவி பெற்று முனையடுவார் என்னும் திருநாமமும் பெற்ருர்.

யாவரே ஆயினும், பகைவென்று, சிவனடியார்களுக்கு இன்பம்மேவ அளிக்கும் முனையடுவார் நாயனரது விரைப்பூங் கமலக் கழல் வணங்கி வாழ்வாம்.

—"பிரபாகரன்"

நிகழும் பிரமாதீச ஆண்டு பங்குனித் திங்கள் 20-ஆம் நாள், (2-4-74) செவ்வாய்க்கிழமை முனையடுவார் நாயனர் திருநட்சத்திரமாகிய பூசம்.

அருளோசை

திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 2	பிரமாதீச பங்குனி 1974 மார்ச்சு	ஓசை 9

அருளோசை அன்பர்களுக்கு, வணக்கம்.

இந்த இதழில் வினவிடைப் பகுதி தொடங்குகிறது. அதிலுள்ள கேள்விகள் எல்லாம் இந்த இதழிலுள்ள கட்டுரைகள் பற்றியனவே!

எனவே கட்டுரைகளை ஆழமாகப் படியுங்கள்!

கேள்விகளுக்கு விடைகளைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

அவற்றிற்கு முதல் பரிசு!
இரண்டாம் பரிசு!
மூன்றும் பரிசு!
நான்காம் பரிசு!

ஆம், நான்கு பரிசுகள் உண்டு! முயற்சி செய்து பாருங்கள்.

கேள்விகளுக்குரிய விடைகளை முழு நீளத் தாளில் (புல்ஸ்கேப் சைஸ்) நான்கு பக்கங்களுக்கு மிகாமல் தெளிவாக எழுதி 31-3-74க்குள் அனுப்பி வையுங்கள்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

கொஞ்சம் புரிந்தேன்

"பரம்"

என்னுள் இருக்கின்ற பேரழகைநான்
இன்னும் உணரவில்லை!—விரி
விண்ணை அண்ணுந்தது எங்கேஎங் கேஎன்று
வித்தகம் பேசிநின்றேன்.

பக்கத்தில் பூத்துக் குலுங்குகின்ற சுடர்ப்
பங்கயம் பார்க்கவில்லை!—பெருந்
துக்கத்தொடு நெடுந் தூரம் அலைந்தெழில்
தோற்றமே யில்லை என்றேன்.

பன்றியை நீராட்டிச் சந்தனம் பூசின் அப்
பக்குவம் காத்திடுமோ?—இறைவா
ஒன்றுமறியாஇப் பேதைக்குன் சீரடி
ஒன்றும் தகுதியுண்டோ?

கண்ணுள் மணியும் மணியுள் ஒளியும் அக்
காட்சியும் நீயெனவே—ஒரு
எண்ணம் மனத்தினில் மின்னி மறைந்தது
ஏதோ கொஞ்சம் புரிந்தேன்!

அட்டைப்பட விளக்கம்

திருக்கயிலையில் அம்மை விளையாட்டாகச் சிவபிரானின் கண்களை மூடியதனால் ஏற்பட்ட குற்றம் தீரும்படி காஞ்சியில் கம்பா நதிக்கரையில் மணலால் சிவலிங்கம் அமைத்து வழிபடுதல்.

(முழு விவரம்: மணி 2, ஓசை 5ல், பக்கம் 140)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை,
சென்னை-600018.



திருவளர் செல்வ,

நல்வாழ்த்துக்கள் !

சென்ற கடிதப்படி பௌத்தத்திற்கு ஆன்மா உண்டு என்ற கொள்கை இல்லை என்று அறிந்தோம். ஆனல், இந்து சமயங்கள் ஆன்மாவை ஒத்துக்கொள்பவை. இந்து சமயங்களுள்ளும்கூட வேதாந்த சமயத்தைச் சார்ந்தவர்கள் பௌத்தத்தோடு முற்றிலும் முரண்படுபவர்கள். வேதாந்திகள் மாற்றத்தை ஒத்துக்கொள்வதில்லை. "மாற்றம் என்பது பொய். அது வெறும் தோற்றம். உண்மையில் மாற்றம் நிகழ்வதில்லை. மாற்றமில்லாத நிலைபேறுதான் உண்மையான கொள்கை. மாற்றங்களால் பாதிக்கப்படாத நிலையான ஒரு பொருள் உண்டு. அதுவே பரமாத்மா. அது மாறுவதாகத் தோற்றமளிப்பது மாயையேதவிர உண்மையில் மாற்றமில்லை" என்பது வேதாந்திகள் கொள்கை. இங்ஙனம் இருவேறு மாறுபட்ட துருவங்களுக்கிடையில் நமது சைவசித்தாந்தச் செந்நெறி, கொள்கைகளை நிர்ணயிக்கிறது. சைவ சித்தாந்தம் மாற்றத்தையும் ஒத்துக்கொள்கிறது. நிலைபேறுன கொள்கையையும் ஒத்துக்கொள்கிறது. மாற்றமடைவதன் மூலம் பொருள்களுக்கு ஏற்படும் நிலை என்ன என்று அறிய விரும்புவது இயல்பே.

பொருள்கள் மாற்றம் அடைகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. சில மாற்றங்கள் வெளிப்படையாகத் தெரிவன.

சில மாற்றங்கள் வெளிப்படையாகத் தெரிவதில்லை. வெளிப்படையாகத் தெரியாமையால் மாற்றங்கள் நிகழவில்லை என்று எண்ணக்கூடாது. மரத்திலிருந்து இலை விழுகிறது. இரண்டு நாள்களில் அது சருகு ஆகிறது. இரண்டு நாள்களில் அது மண்ணோடு மண்ணாக மட்கிப் போகிறது. இந்த மாற்றம் சில நாள்களில் நிகழ்கின்றது. இந்த மாற்றம் நிகழ்வது நமக்கு வெளிப்படையாகத் தெரிவது உண்மை. திறந்த வெளியில், வெய்யிலில், மழையில், காற்றில், பனியில் ஒரு பலகை கிடக்கிறது. அது மட்கி மண்ணாவது இயற்கை. ஆனால், அது மட்கி மண்ணாவதற்குப் பல நாள்கள் ஆகும். ஆதலால், அந்த மாற்றங்கள் நமக்குத் தெரிவதில்லை. மாற்றங்கள் நிகழ்ந்தது உண்மை. ஆனால் பொருள்—இலை, பலகை ஆகியன உண்டு. இவையிரண்டு பொருள்களும் இல்லாமல் மாற்றம் நிகழ்ந்தது என்று பௌத்தம் கூறுவதை எப்படி நம்புவது?

பொருள்களில் மாற்றம் வினாடிதோறும் நிகழ்கிறது. பௌத்தக் கொள்கையின்படி ஒரு பொருள் உண்டு என்று நம்பினால் அந்தப் பொருள் செயற்பட வேண்டும் என்பதாகும். செயல் நிகழ்வதுதான் பொருள் உண்மைக்கு அடையாளம். செயல் இல்லையேல் பொருள் இல்லை. அதாவது, ஒரு செயலுக்குப் பொருள் காரணமாய் நின்று, காரியத்தைச் செய்வதாகும். காரியம் இல்லையென்றால் காரணமும் இல்லை என்பதே கருத்து. முயற் கொம்பு!-இது ஒரு பொருளில்லை. ஏனெனில் அதன் மூலம் ஒரு காரியமும் நிகழ்வதில்லை. ஆக, காரியம் இல்லையானால் பொருளும் இல்லை என்பதே பௌத்தர் முடிபு விதை உள்ளது என்றால், முளை தோன்ற வேண்டும். விதை, காரணம் என்றால் முளை காரியம். அதுவும் உடன் தோன்ற வேண்டும். விதைக்குள் முளையைத் தோற்றுவிக்கும் உள்ளீடு இருக்கிறது; சக்தி இருக்கிறது. அது இப்போதைக்கு மறைந்து கிடக்கிறது. சில நாள்கள் கழித்து முளைவிடும் என்றால் பௌத்தர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். இதுபற்றி விரிவாக உனக்கு எழுத வேண்டும். அடுத்த கடிதத்தில் எழுதுகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

குன்றக்குடி அடிகளார்



செய்யாறு வேதபுரீசுவரர் கோயில்

திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ, பி.எல்., ஐ.ஏ.எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை.

தொண்டை நாட்டில், தேவாரத் திருப்பதிகம் பெற்ற சிவத் தலங்களுள் ஒன்றாகத் திகழ்வது, செய்யாறு வேதபுரீசுவரர் கோயில். இத்தலம் காஞ்சிபுரத்துக்கு மேற்கே பதினெட்டுக் கல் தொலைவில் இருக்கின்றது. சேய் என்னும் முருகப்பெருமான், தன் வேலினால் உண்டாக்கிய ஆறு ஆதலின், சேயாறு என்னும் காரணப்பெயர் பெற்ற ஆறு, இப்போது செய்யாறு என மருவி வழங்கப்படுகின்றது. ஆற்றின் பெயரை ஒட்டியே ஊரின் பெயரும் இப்போது செய்யார் என வழங்கி வருகின்றது.

எனினும் இத்தலத்தின் பழமையான பெயர் திருவோத்தூர் என்பதாகும். இத்தலத்தில் சிவபெருமான் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் வேதத்தை ஓதி வைத்துத் திருவருள் புரிந்தார் என்பது தலவரலாறு. அஃது இப்போது திருவத்தூர், திருவத்திபுரம் என வழங்கப்பெற்று வருகின்றது. இக்கோயில் பெரியது. கோபுரமும் பெரியதாக உள்ளது. இக்கோயிலின் உள்ளே ஆதிகேசவப்பெருமாள் சந்நிதியும் தனியே அழகுற அமைந்திருக்கின்றது. இவ்வமைப்பு பண்டைக் காலத்திலேயே சைவ-வைணவ சமரச உணர்வு நிலவி இருந்தமைக்குச் சிறந்த சான்றாகத் திகழ்கின்றது.

இத்தலத்தில் சூரியன் சிவபெருமானை வழிபட்டு அருள்பெற்றான். சிவபெருமான் சூரியனுக்கு உலகையெல்லாம் விரைவில் சுற்றி வருதற்கேற்ற ஒற்றைச் சக்கரத் தேரை அளித்தார். மற்றும் இங்கு முருகப்பெருமான், திருமால், இலக்குமி ஆகியோரும், சிவபெருமானை வழிபட்டு அருள்புரிந்தனர். இங்குள்ள இறைவனுக்கு வேதநாதேசுவரர் என்பது பெயர். இறைவி இளமுலைநாயகி எனப் போற்றப்பெறுகின்றாள். தை மாதத்தில் இங்குப் பெரிய திருவிழா நடைபெறும். தை மாதத்தில் இரதசப்தமியின்போது இங்கு நடைபெறும் தேர்விழா மிகவும் சிறப்புடையது. அதுபோது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இங்குத் திரளாகக் கூடி வழிபட்டு மகிழ்வர்.

சைவ சமய ஆசிரியர்களுள் ஒருவராகிய திருஞானசம்பந்தர் இங்கு எழுந்தருளியபோது, அவரால் ஓர் அற்புத அருட்செயல் நிகழ்த்தப் பெற்றது. சிவனடியார் ஒருவர் பனைமரத்தோப்பு ஒன்று வைத்து வளர்த்து வந்தார். அவைகள் அனைத்தும் ஆண் பனைகளாகவே வளர்ந்தன. அதனால் அவர் விரும்பியபடி அவற்றினின்று காய்கள் ஏதும் உண்டாகவில்லை. அதுகண்டு அச்சிவனடியார்பால் அழுக்காறு கொண்ட ஊரவர் சிலர், அவரை இழித்துரைத்துப் பழித்து இகழ்ந்தனர். "நீர் சிவபெருமானை வழிபடுகின்றீரே, அவரால் உமக்கு என்ன பயன்? நீர் வைத்த பனைமரத்தோப்பு பயனில்லாமற் போயிற்றே! நீர் வழிபடும் சிவபெருமான் அருளும் ஆற்றலும் உடையவராக இருந்தால், இவ்வாறு நிகழ்ந்திருக்குமா?" என அவரை ஏளனம் செய்தனர். அழுக்காறு காரணமாகத் தம்மைமட்டுமேயன்றி, தம்வழிபடு கடவுளாகிய சிவபெருமானையும் ஊரவர் சிலர் இகழ்வது கண்டு, அச்சிவனடியார் பெரிதும் மனம் வருந்திப் புழுங்கினர். திருஞானசம்பந்தர் எழுந்தருளிய போது அவரிடம் தம் குறையை விண்ணப்பித்துக் கொண்டார். இரக்க உள்ளம் கொண்ட திருஞானசம்பந்தப்பெருமான்,

"பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேயவொளி மழுவாளங் கைக்
கூத்தீர் உம்ம குணங்களே"

எனத் தொடங்கும் சிறந்த திருப்பதிகத்தினை அருளிச் செய்தார். அதன் இறுதிப் பாடலாகிய திருக்கடைக்காப்பில்,

"குரும்பை யாண்பனையீன் குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும் புகலியுண் ஞானசம்பந் தன்சொல்
விரும்புவார் வினை வீடே"

என அவர் அருளிச் செய்தபடி, ஆண்பனைகளெல்லாம் இறைவனருளால் பெண்பனையாக மாறிக் குலைகளை ஈன்றன. அதுகண்ட ஊரவர் எல்லோரும் இறையருளை வியந்து துதித்தனர். இவ்வருள் நிகழ்ச்சியின் விளைவான பனை மரமே, இத்தலத்தின் புனித மரமாக அமைந்தது. இதற்கு அடையாளமாக இப்போதும் வெளிச்சுற்றில் நாலைந்து பனை மரங்கள் உள்ளன. அன்றியும் கல்லால் அமைத்த பனைமரத்தின் திருவுருவம் ஒன்றும் இத்திருக்கோயிலினுள் நிறுவி வழிபடப்பட்டு வருகின்றது. இஃது ஒருபாதி ஆண்பனை மரமாகவும், மற்றொரு பாதி பெண் பனைமரமாகவும் அமைக்கப் பெற்றுள்ளது.

இக்கோயிலில் பழமையான பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் கோயிலின் தினசரி வழிபாட்டிற்கும், நிவேதனத்திற்கும், பூந்தோட்டத்திற்கும், கோயில் பணியாளர்களின் படித்தரத்திற்குமாக நிலங்கள் வழங்கப்பெற்ற குறிப்புக்கள் தெரிகின்றன. கோயிலில் நந்தா விளக்கு அமைப்பதற்காகப் பலர் நன்கொடை அளித்துள்ளனர். மூன்றும் குலோத்துங்கச் சோழன் இக்கோயில் இறைவனுக்கு விலை

மதிப்புள்ள பல பொன் அணிகலன்களை வழங்கினான் என்றும் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. மற்றும் கேதாரநாதர் என்னும் பெயரில் ஒரு திருமடம் இருந்ததாகவும் ஒரு கல்வெட்டால் புலனாகின்றது.

இத்தலத்திற்கு இற்றைக்குச் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர்க் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாடலும் அமைந்துள்ளன.

"பவம்மாய்த்து ஆண்அது ஆளும்
பனைகாய்த்தே மணம் நாறும்
பழமாய்ப் பார்மிசை வீழும்படி,
சிவமாய்த் தேன்அமுது ஊறும்
திருவாக்கால் ஒளிசேர் வெண்
திருநீற் றால்அமர் ஆடும் சிறியோனே!
செழுநீர்ச் சேய்நதி ஆரம்
கொழியாக் கோமளம் வீசும்
திருவோத்தூர் தனில் மேவும் பெருமானே."

இதன்கண் ஆண்பனை பெண்பனையாகிய அருள் நிகழ்ச்சியும், இத்தலம் சேயாற்றங்கரையில் அமைந்திருப்பதும் குறிக்கப்பெற்றுள்ளன. திருஞானசம்பந்தரின் தேவாரத்தினை அருணகிரிநாதர், "சிவமாய்த் தேன் அமுதூறும் திருவாக்கு" எனப் போற்றிப் புகழ்ந்திருத்தல் கருதி மகிழத்தக்கது. இத்தகைய சிறப்புமிக்க செய்யாறு வேதபுரீசுவரர் திருக்கோயிலுக்கு, அன்பர்கள் அனைவரும் சென்று தரிசித்து மகிழ்வார்களாக.

இராமாநுசர் சென்ற இதழ் 228 ஆம் பக்கம் தொடர்ச்சி

வில்லிதம்பதிகளும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட சன்மானப் பணத்தை அரசனிடமே திருப்பிக் கொடுத்துவிட்டனர். இந்நிகழ்ச்சி அகளங்கனுக்குப் பேராச்சிரியத்தை உண்டாக்கியது. என்னே என்று இந்தகுரு, சீடர்களின் ஒழுக்கத்தைப் போற்றினான். இந்த வேடர்களுக்கும் இவ்வளவு அறிவு வந்து விட்டதே என்று வியந்தான். இவர்கள் பொருளாசை யற்றவர்களாகி விட்டார்கள். இவர்கள் முகத்தில் எப்பொழுதும் அமைதியும், இதயத்தில் சாந்தியும் பெற்று விளங்குகிறார்களே! இவர்களிடத்தில் முன்பெல்லாம் காணப்பட்ட அச்ச உணர்ச்சி இப்போது அற்றுப்போய்விட்டதே! இத்தகைய மாற்றங்களுக்கு இராமாநுசரல்லரோ காரணம், என்று சிந்தித்தான். உடனே பிள்ளையுறங்காவில்லிதாசரை அழைத்து-அவரை வணங்கி "நீங்கள் பெற்ற பேற்றை இராமாநுசர் வழியாக அடியேனுக்கும் கிடைக்கும்படிச் செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்.

பிள்ளையுறங்காவில்லியும் அகளங்கனை இராமாநுசரிடம் அழைத்துச் சென்று அரசனின் மனநிலையைத் தெரிவித்தார். அகளங்கனும் வேரற்ற மரம்போலே இராமாநுசருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி 'அடியேனை ஆட்கொண்டருள வேண்டு'மென்று வேண்டினான். கருணையே வடிவான இராமாநுசரும் அகளங்கனுக்கும் சங்கு சக்கரப் பொறியை ஒற்றித் திருமந்திர உபதேசம் செய்து அகளங்க நாட்டாழ்வான் என்ற தாசியநாமத்தையும் வழங்கி அவனைத் திருவரங்கனின் திருத்தொண்டில் ஈடுபடுத்தினர்.

இவ்விதழ் 257 ஆம் பக்கம் பார்க்க.

மாவட்டக்
கிளைச்சங்க மாநாடுகள்

மாவட்டந்தோறும் நடைபெறவிருக்கும் கிளைச் சங்க மாநாடுகளின் தேதிகள் குறிக்கப்பட்டுள்ளன. மாவட்ட மாநாடுகளில் தலைவர் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் கலந்துகொள்ள இருக்கிறார்கள். அன்புகூர்ந்து முயற்சிகளைப் பொறுத்துக்கொண்டு மாவட்ட மாநாடுகளைச் சிறப்புற நடத்தித் தரும்படி அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

இராமநாதபுரம்	...	...	31-3-74
தஞ்சாவூர்	...	...	1-4-74
செங்கல்பட்டு	...	...	9-4-74
திருச்சிராப்பள்ளி ...		...	21-4-74
தென்ஆர்க்காடு	...	...	22-4-74
மதுரை ...	...	...	11-5-74
திருநெல்வேலி	...	...	12-5-74
கன்னியாகுமரி	...	...	13-5-74
சேலம் ...	...	...	18-5-74 19-5-74
வடஆர்க்காடு	...	...	20-5-74
தருமபுரி	...	...	21-5-74

செயலாளர்

தமிழ்நாடு தெய்விகப் பேரவை

திருமாலடியார்

இராமாநுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், பி.ஏ., பி.ஓ.எல்.

(8)

இராமாநுசர் எம்பெருமானாரானார்

இராமாநுசர் திருவரங்கத்தில் அரங்கனுக்கு நித்திய பூசைகளையும், திருவிழாக்களையும் முறைப்படி செய்வித்து, அப்பெருமான் திருவடிகளைப் போற்றி எழுந்தருளி இருந்தார். இப்படியிருக்கையில் ஒருநாள் இரவு இராமாநுசருக்கு ஆளவந்தாரின் திருவுருவம் கண்முன்னே தோன்றியது. மேலும் "இராமாநுசரே! கேட்க வேண்டிய அரும் பொருள்களெல்லாம் நம் சீடர்களிடம் உள்ளனவே! அவைகளைக் காலம் கடத்தாமல் நீர் அறிந்துகொள்ள வேண்டாமோ?" என்றும் ஒரு குரலொலி எழுந்தது. உடனே இராமாநுசரும் எழுந்து 'என்னே குருவின் கருணை' என்று வியந்தார்! பொழுது புலர்ந்தவுடன் அனுட்டானங்களை முடித்துக்கொண்டு, பெரிய நம்பிகளின் திருமாளிகைக்குச் சென்றார். நம்பிகளை அடிபணிந்து ஆளவந்தாரின் கட்டளை இவ்வாறு இருந்தது என்று நிகழ்ந்ததைக் கூறினார். நம்பிகளும் இராமாநுசரை நோக்கி, "இதுவரை யானறிந்த ஆழ்பொருள்களை உமக்குக் கூறிவிட்டேன். இன்னும் அருமையான பொருள்களை அறிய விரும்பினீராயின், சிறந்த அறிஞரும், நல்ல நினைவாற்றலுடையவருமான திருக்கோட்டியூர் நம்பிகளிடமும் மற்றும் திருமலையாண்டான், திருவரங்கப் பெருமாள் அரையர் போன்றவர்களிடமும் சென்று கேட்பீராக" என்று பணித்தார்.

இராமாநுசர் திருக்கோட்டியூர் நம்பியை அடைதல்:

இராமாநுசரும் பெரியநம்பிகளின் கட்டளையை மேற்கொண்டு வளங்கள் பல நிறைந்த திருக்கோட்டியூரை அடைந்தார். அங்குத் திருக்கோட்டியூர் நம்பிகளைச் சரணடைந்து, "ஆளவந்தார் உமக்கு அறிவித்த அரும்பொருள்களை அடியேனுக்கு அருளி, அடியேனையும் ஆட்கொண்டருளல் வேண்டும்" என்று வேண்டினார். ஆனால் கோட்டியூர் நம்பியோ, இராமாநுசரின் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கவில்லை. இராமாநுசரோ மனம் தளராமல் அவருடைய திருமாளிகையிலேயே தங்கிப் பொறுமையாகப் பல பணிவிடைகளைச் செய்து வந்தார். இவ்விதம் பதினேழு நாட்கள் சென்றன. ஒருநாள் திருக்கோட்டியூர் நம்பிகளின் சீடர்களெல்லாம் ஒருங்கே கூடி இராமாநுசரின் கூர்த்த அறிவையும், பக்தியையும் பாராட்டி, "அவருக்கு நம்முடைய குருவான கோட்டியூர்

நம்பிகள் அரும் பொருள்களைச் சொல்லாமல் சோதிக்கின்றாரே" என்று மனம் வெதும்பினர். அவர்களெல்லாரும் ஒன்றாய்க்கூடித் தம் குருவினிடம் சென்று "தாங்கள் இன்னும் இராமாநுசரைச் சோதிக்கக் கூடாது. அவர் உண்மையான பக்தர்; கல்வியாளர். ஆதலால் இனியும் காலம் கடத்தாமல் அவருக்கு ஆளவந்தார் அருளிய சரமச் சுலோகப் பொருள்களையும், திருவெட்டெழுத்தின் செம்பொருள்களையும் விளக்கமாக உபதேசித்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டனர். நம்பிகளும் அம்மாணுக்கர்களை நோக்கி, "அன்புடையவர்களே! தண்டமும் பவித்திரமும் தவிர மற்றவற்றைவிட்டு அவரை இங்கு வரச் சொல்வீர்களாக" என்று கட்டளையிட்டார். அவர்களும் பெருமகிழ்வெய்தி இராமாநுசரிடம் தெரிவித்தனர்.

இராமாநுசரும் ஆளவந்தாரின் அருள்பலித்து விட்டது என்று மகிழ்ந்தார். வேறு மடத்தில் தங்கியிருந்த முதலியாண்டானையும், கூரத்தாழ்வானையும் வரவழைத்து அவர்களுடன் திருக்கோட்டியூர் நம்பிகளின் திருமாளிகைக்குச் சென்று தண்டனிட்டார். அப்போது நம்பிகள், இராமாநுசரை நோக்கி "தண்டு பவித்திரத்தோடு உம்மை நாம் வரச்சொன்னோமேயன்றி இவர்களை அழைத்துவரச் சொல்லவில்லையே?" என்று கேட்டார். உடனே இராமாநுசர் "தேவரீர் கூறிய தண்டு, பவித்திரம் ஆகிய பொருள்கள் இவர்களே. இம்முதலியாண்டான் நான் எப்போதும் கையில் வைத்திருக்கும் 'முக்கோல்' ஆகிய தண்டுக்குச் சமமாவார். இக் கூரத்தாழ்வானே நான் எப்பொதும் விரலில் அணிந்து கொண்டிருக்கும் பவித்திரத்துக்குச் சமமாவார்" என்று கூறினர். இவ்வார்த்தைகளைக் கேட்ட திருக்கோட்டியூர் நம்பிகளும் "அப்படியாகில்-உமக்கு மிகவும் நெருக்கமான தொண்டர்களாக இவர்களிருப்பார்களேயானால் உங்கள் மூவருக்கும் ஆளவந்தார் அருளிய எட்டெழுத்தாகிய திருமந்திரத்தின் பொருளைக் கூறுகின்றேன். ஆனால், அம்மந்திரப் பொருளை நீங்கள் யாருக்கும் சொல்லக்கூடாது. இது குருவின் ஆணை" என்று கூறி முறையாக மெய்ம்மைப் பெருவார்த்தையாகிய திருவெட்டெழுத்தின் பொருளை உபதேசித்தருளினர். முதலியாண்டானும், கூரத்தாழ்வானும் திருமந்திரத்தின் ஆழ்பொருளை எண்ணி எண்ணி மகிழ்ந்தனர். திருவெட்டெழுத்தின் சீர்மையைப் போற்றினர். ஆனால், இராமாநுசருடைய உள்ளமோ கவலையுற்றிருந்தது. 'ஒவ்வொருவரும் உய்யும்வண்ணம் பயன் தரத்தக்கதன்றோ இத்திருமந்திரம்! இந்த அரும்பொருளை தமக்குள் மறைத்து வைத்திருப்பின் ஆன்மாக்கள் எவ்வாறு உய்வு பெறும்? இத் திருமந்திரத்தின் பொருளை உணர்ந்தவர், எல்லா உயிர்களிடத்தும் அன்புடன் வாழ வேண்டாமோ? 'பிற உயிர்கள் உய்வதற்கு உரிய வகையைச் செய்யாமல், தாம் உய்யும் வழியை மாத்திரம் தேடிக் கொள்வது அறிவுடைமை யாகுமா? கருணை வடிவினனான கடவுளும் எப்படி இதை ஏற்பன்?' என்று இவ்வாறெல்லாம் பலவாறு சிந்தித்துப் புலம்பினர். 'தமக்கு உபதேசம்

செய்த திருக்கோட்டியூர் நம்பிகளோ இந்த மந்திரப்பொருள்களை யாருக்கும் சொல்லக்கூடாது என்று கட்டளையிட்டுள்ளார்? குருவாகிய அவருடைய கட்டளையை மீறுவதால் எனக்கு நரகம் கிடைக்கும். யான் ஒருவன் நரகம் புகுவதனால் ஒன்றும் கெட்டுவிடாது. இம்மந்திரப்பொருளை யுணர்ந்த மற்ற உயிர்களுக்கு உய்வு கிடைக்குமன்றோ !' என்று எண்ணி அவ்வூரில் நடந்த திருவிழாவின்போது கோயில் மதிலின்மேல் ஏறி நின்று, உலகத்தவர்களைக் கூவி அழைத்தார். தாம் பெரிதும் முயன்று பெற்ற திருமந்திரத்தின் பொருளை யாவரும் எளிதிற் பெறும்படி கூறியருளினார். அப்பொழுதுதான் இராமானுசருக்கு உண்மையில் திருமந்திரப் பொருளைக் கேட்டதனாலான மகிழ்ச்சி உண்டாயிற்று. இவ்விதம் தாம் நரகம் புக நேர்ந்தாலும் மற்றவர்கள் நல்வாழ்வு பெற்று நற்பேற்றையடையும்படி பரந்த உள்ளத்தோடு திருமந்திரப்பொருளை வாரி வழங்கிய இராமானுசரின் பரந்த அன்பு உள்ளத்தை யாவரும் போற்றினர்.

இச்செய்தியைக் கேட்ட திருக்கோட்டியூர் நம்பிகள் திடுக்கிட்டார். இராமானுசரிடம் போய் "நீர் இப்படிச் செய்யலாமா? குருவின் ஆணையை மீறினவர் அடையும் பயனை நீர் அறியீரோ?" என்றார். இராமானுசரும் தம் குருவின் தாளிணைகளில் வீழ்ந்து வணங்கி, "சுவாமீ, தங்களுடைய ஆணையை மீறியதனால் நான் ஒருவனே நரகம் புகுவேன்! ஆனால், தாங்கள் அருளிய மந்திரப்பொருளை உணர்ந்தவர்கள் அனைவரும் நல்லுலகம் செல்வரன்றோ! அதுவே அடியேனுக்கு இன்பம்" என்றார். நம்பிகளும் இராமானுசருடைய கருணையுள்ளத்தைப் போற்றி, 'எல்லோரிடமும் அன்பு பாராட்டும் இப்பேரருள் நம்மிடம் இல்லையே' என்று வருந்தினார். இராமானுசரின் தன்னலமில்லாப் பிறர்நலம் நாடும் உயரிய பண்பைக் கண்டு வியந்தார். மகிழ்ச்சிப்பெருக்கால் கண்களில் நீர்பெருக, இராமானுசரைத் தழுவி அணைத்து "உம்மை ஒப்பார் இவ்வுலகில் ஒருவரும் இல்லை. நீர் எம்பெருமானாரே! இன்று முதல் எம்பெருமானார் என்றே நீர் அழைக்கப்படுவீர்" என்று வாழ்த்தியருளினார். "இதுவரை 'வைதிக சித்தாந்தமாய்' வழங்கி வந்த நம்முடைய சித்தாந்தம். இனி "எம்பெருமானார் தரிசனம்" என்றே உம்முடைய பெயரால் வழங்குவதாகுக" என்று சொல்லி அருள்பாலித்தார்.

நாட்கள் சில சென்றன. திருக்கோட்டியூர் நம்பி இராமானுசரை வரவழைத்து "அன்பரே! உமக்கு நாம் முன்பு அருளிய மந்திரப் பொருளினும் மேலான பொருள்கள், சிலவற்றைச் சொல்ல விரும்புகிறோம். உம்முடைய விருப்பம் என்ன" என்று கேட்டார். அப்பொருள்களை அறிய விருப்பம் இருந்தும் இராமானுசர் ஒன்றும் பேசாமல் இருந்துவிட்டார். அப்பொழுது கோட்டியூர்நம்பி, இராமானுசரை நோக்கி "உம்முடைய மனத்தில் உள்ளதை ஒளியாமல் கூறும். ஏன்? ஒன்றும் பேசாமலிருக்கிறீர்" என்று கேட்டார். உடனே

இராமானுசர் "அருமைக் குரவரே! இதுவரை தாங்கள் கூறிய பொருளுக்கு மேற்பட்ட பொருள் உண்டு என்று எண்ணிக் கேட்பேனேயானால் தாங்கள் கூறிய பொருளில் ஊற்றம் இல்லாதவனாவேன். கேளாதிருப்பேனேயாகில் தாங்கள் கூறிய பொருள் என் நெஞ்சிற்படியவில்லை என்றாகிவிடும். ஆதலால் இவற்றுட் செய்யத்தக்கது யாது என்று சிந்தித்திருந்தேன் என்று பதிலுரைத்தார். திருக்கோட்டியூர் நம்பிகளும் இராமானுசருடைய கலக்கத்தை உணர்ந்து "அன்பரே இனி நீர் உம்முடைய விருப்பத் தலமான திருவரங்கம் சென்று, நீர் விரும்பும் போது இக் கூரத்தாழ்வான், முதலியாண்டான் ஆகிய இவ்விருவரையும் கூட அழைத்துவராமல் நீர் ஒருவர் மட்டுமே இங்கு வருவீராகில் இன்னும் சில அருமறைப்பொருளைக் கூறுவோம்" என்று விடை கொடுத்தனுப்பினார். இராமானுசரும் 'எம்பெருமானார்' என்ற திருப் பெயரோடே திருவரங்கம் திரும்பினார்.

திருவரங்கத்தில் சில திங்கள் இருந்து, அரங்கன் திருத்தொண்டிலீடு பட்டிருந்த இராமானுசருக்குக் குருவின் ஆணைப்படி மறுபடியும் திருக்கோட்டியூர் சென்று 'சரம சுலோகத்தின்' பொருளையும் அறிய ஆவலுண்டாயிற்று. குருவினது கட்டளைக்கேற்பத் தாமொருவராகவே கோட்டியூருக்குப் புறப்பட்டார். அங்கு நம்பியை அவர் இல்லத்தில் காணாது, நம்பியின் மகளான தேவகி அம்மையிடம் "தந்தை எங்கே?" என்று கேட்டார். அப்பெண்ணும் அவ்வீட்டின் மேல் தளத்தைச் சுட்டிக்காட்டி, "அங்கே போய்ப் பாரும்" என்றாள். இராமானுசரும் அங்கு சென்று கண்டபொழுது நம்பிகள் தியான சமாதியில் ஆழ்ந்திருந்தார். பின்பு சிறிது நேரம் கழித்து இராமானுசர் வந்திருப்பதை உணர்ந்த கோட்டியூர் நம்பிகளும் அருகே அழைத்து "இச் சரீரத்தின் நிலையாமை காரணமாக நாம் உமக்கு இப்பொழுதே உபதேசிக்கிறோம்" என்று சொல்லிச் 'சரம சுலோகப் பொருளை உபதேசித்தார். "இப்பொருளை, ஓராண்டுகாலம் தொண்டு நெறியிலீடுபடுத்திச் சோதித்த பின்பு கூரத்தாழ்வானுக்கு மட்டும் உபதேசிக்கலாம்" என்று பணித்தார். அப்படியே அம் மறைப்பொருளை ஆழ்வானுக்கு மாத்திரம் இராமானுசர் ஓராண்டு கழித்து உபதேசித்தார். இதை யறிய ஆவல் கொண்ட முதலியாண்டானைத் திருக்கோட்டியூர் நம்பிகளிடமே அனுப்பிவிட்டார். முதலியாண்டானும் நம்பிகளிடம் பலமுறை நடந்து-பணிந்து வேண்டிய பின், நம்பிகள் "முதலியாண்டானாகிய உம்மிடம் 'குலச்செருக்கு, கல்விச் செருக்கு, செல்வச்செருக்கு' ஆகிய இந்த மூன்றும் உள்ளது. இவை நீங்கினால் உமக்கும் இராமானுசரே உபதேசிக்கலாம்" என்று கூறிவிட்டார். முதலியாண்டானும் மூன்று செருக்கையும் விட்டு இராமானுசரை அடிப்ணிந்து அவரிடம் அருமறைப் பொருளைக் கேட்டறிந்தார்.

(தொடரும்)

சந்தான குரவர் வரலாறு

டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,

பொதுமறையாம் திருக்குறள்மாட்டு இஞ் ஞானஆசிரியர் வைத்துள்ள பெருமதிப்பு இந்நூலுட் சிலவரிகளால் விளங்குகின்றன :

“ தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவரென்று—நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள் ளுவர்உரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல்.”

“நிலையான தமிழ்” என்று திருக்குறளின் பெருநிலையைப் பொருத்த மான சொற்களால் விளக்கிய இச்சான்றோர், “மெய்வைத்த சொல்” என்றும் அத் திருநூலை விளக்கியுள்ளமை ஆழ்ந்துணரத்தக்கது. என்றும் உண்மையாயிருக்கக் கூடிய மெய்ம்மைகளையே (Eternal Truth) குறளாசிரியர் கூறுகின்றாராதலின், அவரது அரும் பனுவலை இவ்வாறு குறித்ததுடன், அவரது புலமையைத் “தெய்வப் புலமை” என்று போற்றியிருத்தல் கூர்ந்துணரத்தக்க குறிப்புடையது.

உலகாயதர், மாயாவாதியர், பௌத்தர், சமணர், பிரபாகரர் ஆகிய புறச் சமயவாதிகள்மாட்டுச் செல்லாதே என்று நெஞ்சிற்குணர்த்தித் தம் ஞான ஆசிரியர்மாட்டு ஆற்றுப்படுத்தும் அழகையும் இந்நூலிற் கண்டின்புறலாம்.

உண்மை நெறி விளக்கம் :

உண்மை நெறி விளக்கம் ஆறு வெண்பாக்களை உடைய சிறுநூலே. ஆயினும் சைவசித்தாந்த நெறியுட் பேசப்பெறும் தசகாரியங்களை எடுத்து விளக்குவது. தசகாரியங்களாவன : தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி; ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்மசுத்தி; சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பன அவை.

சிவத்தோடு கலந்த பெரியோர் ஊழ்வினைப் போக்கால் தம் செயல் அற்றுப் பாதகமாகத் தோன்றுவனவற்றைச் செய்தாலும், கொலை, களவு, கள்ளுண்ணல் முதலியனவற்றைப் பழகினாலும், தீயநெறியிற் பயின்றாலும், குலமுறை தவறி நடந்தாலும், பிற தவறுகள் பல நடந் தாலும், அவர்கள் சிவத்தோடு இசைந்து நிற்பதால் முதல்வன் அவர்களுடைய உடலில் விளங்கி உயிரோடு கலந்து உண்டல், உறங்கல், நடத்தல் முதலிய பல வகைப்பட்ட நுகர்வுகளையும் தன்மய மான இன்ப வடிவாக இயற்றித் தன்னொடு வேறற நிற்குமவரைத் தன்மயமாக ஆக்கி விடுவன். எல்லாம் சிவபோகமாகப் பெற்ற பெரு நெறியே சிவபோக வளர்ச்சி என்று பேசப்படும் என்று இந்நூலின் ஆறும் திருப்பாட்டில் அருள்வர்.

சங்கற்ப நிராகரணம் :

சங்கற்ப நிராகரணம் செய்யப்பட்ட காலம் இந்நூற் பாயிரத்தால் விளங்குதல் முன்னும் கூறப்பட்டது. சமயங்களை அவற்றை உடைய வரது சங்கற்பம் (கொள்கை) ஆகவும், மறுப்புக்களை ஒவ்வொரு சமயத் திற்கும், அடுத்து மேனிலையில் உள்ள சமயத்தவர் மறுப்பதாகவும் முறையே வைத்து முடிவில் சித்தாந்த சைவத்தை வைத்துக் கூறியுள்ள முறை அறிந்து இன்புறத்தக்க அருமைப்பாடுடையது. மறுப்புக்கள் அனைத்தும் நுட்பமாகத் தருக்க நெறியில் அமைந்துள்ளமை அறிவிற்கு விருந்தாக உள்ளது.

இருபது நேரிசையாசிரியப் பாக்களை உடையது. மாயாவாத மதத்தையும், சிவஞானசித்தியார் பரபக்கத்திற் கூறப்படாத அகப்புறச் சமயங்கள், அகச்சமயங்கள் ஆகியவற்றையும் எடுத்துக் கூறி அவற்றிற்கும் சைவசித்தாந்தத்திற்கும் உள்ள வேறுபாடுகள் நுட்பமாக உணர்த்தப்படுகின்றன.

சிவப்பிரகாசம் :

சிவப்பிரகாசம் உமாபதி தேவநாயனாரால் இயற்றப்பட்ட பெரிய சைவசித்தாந்த நூல் ஆகும். சிவஞானபோதம், சிவஞான சித்தியார் ஆகிய இருநூல்களையும் பின்பற்றிச் செய்யப்பெற்றது இது.

"தெரித்தகுரு முதல்வர்உயர் சிவஞான போதம்
செப்பினர்; பின்பு அவர்புதல்வர் சிவஞான சித்தி
விரித்தனர்;மற் றவர்கள் திரு வடிகள் போற்றி
விளம்பியநூல் அவையிரண்டும் விரும்பிநோக்கிக்
கருத்திலுறை திருவருளும் இறைவன் நூலும்
கலந்து, பொது உண்மையெனக் கருதி, யானும்
அருத்திமிக வுரைப்பன் வளர் விருத்தம் நூறும்
ஆசில் சிவப்பிரகாசம் ஆகும் அன்றே"

என்று இதனை உமாபதி தேவரே தம் பாயிரத்துள் தெளிவாகக் கூறியுள்ளனர். பொது அதிகாரம் ஐம்பதும், உண்மை அதிகாரம் ஐம்பதும் ஆக நூறு விருத்தங்களை உடையது. இது சிவஞான சித்தியார் சுபக்கத்திற்கு ஒரு சுருக்கம் என்றே கூறலாம்.

இவர் பழமையானவை என்று கூறப்படும் எல்லா நூல்களும் முழுதும் நன்மையானவை அல்ல; இன்று தோன்றிய புதுமையானவை எல்லாம் தீயவாவனவும் அல்ல என்று தம் நூற் பாயிரத்தே கூறியுள்ள கருத்து, இவருடைய விரிந்த உள்ளத்தையும், புதியன தழுவுகின்ற போக்கையும் உணர்த்துகின்றது :

"தொன்மையவாம் எனுமெவையும்
நன்றாகா ; இன்று
தோன்றியநூல் எனுமெவையும்
தீதாகா"

சைவசித்தாந்த நெறியின் அருளாளர்கள், அத்தகு பரந்துவிரிந்த திருவுள்ளம் கொண்டிராவிட்டால், மெய்கண்ட நூல்கள் பதினான்காக விரிந்து மலர்ந்திருக்க இடம் இராது.

இந்நூல் நுதலிய பொருளை அறிந்துணர்ந்திட, உமாபதி தேவரே ஒரு விருத்தத்தில் இதனை அருளியுள்ள திறம் போற்றத்தகுந்தது. அந்தப் பாடல் சைவசித்தாந்த நெறியின் சாரமாக விளங்கும் விழுப்பம் உடையது:

"புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்ப்
புகலளவைக் களவாகிப் பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய் இருள்வெளிபோற் பேதமும் சொற்பொருள் போற்
பேதாபேதமுமின்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய் உடலுயிர்கண் அருக்கன்
அறிவொளிபோற் பிறிவரும் அத்து விதமாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்றாம்."

சிவப்பிரகாசக் கருத்துப் பகுப்பினை ஓர் அழகிய ஆசிரியப் பாவினால் உரைக்கும் சிறு நூல் ஒன்றும் உண்டு. சீகாழிச் சிற்றம்பலவன் என்பது அவ்வகவலின் இறுதி வரிகளால் இனிது விளங்கும்; அவ்வரிகள் பின்வருமாறு :

"இப்படி உமாபதி தேவன் உரைத்த
மெய்ப்படு சிவப்பிர காச விருத்தக்
கருத்தின துண்மை விரித்துரைத் தருளினன்
சண்பையில் வாழுந் தவகுருநாதன்
பண்பமர் சிற்றம் பலவன் தானே."

ஏனைய பனுவல்கள் :

ஏனைய நூல்களில், கோயிற் புராணம் தில்லைத்தல புராணம்; ஐந்து சருக்கங்களும், 415 செய்யுட்களும் உடையது. திருத்தொண்டர் புராண சாரம் எழுபத்தாறு விருத்தங்களில் பெரியபுராணத்தில் உணர்த்தப்பெறும் அறுபத்து மூன்று நாயன்மார் வரலாற்றை உணர்த்துவது. திருமுறை கண்ட புராணம் நாற்பத்தைந்து செய்யுட்களில் தில்லையில் நம்பியாண்டார் நம்பிகள் திருமுறை தேடித் தொகுத்த வரலாறு உரைப்பது. சேக்கிழார் புராணம் திருத்தொண்டர் புராண ஆசிரியர் வரலாற்றை நூற்று மூன்று பாடல்களால் உணர்த்துவது. கோயிற் புராணம் தவிர ஏனையவற்றை உமாபதியார் செய்திலர் என்னும் ஒரு கருத்துச் சைவ உலகத்தில் வழங்கி வருதல் அறியத்தக்கது.

முற்றும்

சிவனடியார் வரலாறு :

உ

நேச நாயனர்

சீர்வளர் சிறப்பின் மிக்க செயல்முறையும் ஒழுக்கமும் குன்ருத சிந்தையும் வாய்மையுடையவர்களும் வாழுகின்ற புகழ்மிக்க பழம்பதி காம்பீலி நகரம். அந்நகரிலே துணி நெய்கின்ற அறுவையர் குலத்திலே திருஅவதாரம் செய்தவர் நேசர் என்பவர். அவர் பரம்பரைக் குலத் தொழிலில் மேம்பாடு பெற்றதோடு, சிவனடியார்களுக்குத் தொண்டு செய்து அவர்கள் திருவடியைத் தலைமேற் கொண்டு பணியும் பேரன்புடையவராகவும் இருந்தார்.

அவர் தம் மனத்தின் செய்கையைச் சிவபெருமானின் செவ்விய திருவடிகளுக்கு ஆக்கினர். உயர்வுமிக்க வாக்கின் செய்கையைத் திரு வைந்தெழுத்துக்கு ஆக்கினர். கைத்தொழிலின் செய்கையைச் சிவனடி யார்களுக்குப் பாங்கான உடைகளும் பழுதிலாத கோவணமும் நெய் வதற்கு ஆக்கினர்.

இவ்வாருக உடைகளும், கோவணமும் நெய்து சிவனடியார்கள் வந்து வேண்டும் போதெல்லாம் இல்லையென்ஞது அளித்து அவர்கள் அடிபணிந்து, நலம் பெற்று அரனடி நீழல் சேர்ந்தார்.

சிவபெருமான் திருவடி சேர்வதற்கு, தமது குலத்தொழிலாகிய நெய்யுந் தொழிலைக் கருவியாக்கி, சிவனடியார்களுக்கு உடையும், கோவணமும் இடையருது அளித்துவந்த, நேசநாயனர் திருவடிகளை வணங்கி வாழ்வாம்.

—பழ-தருமு-ஆறுமுகம்.

நிகழும் பிரமாதீச ஆண்டு பங்குனித் திங்கள் 16-ஆம் நாள் (29-3-74) வெள்ளிக் கிழமை நேச நாயனரது திருநட்சத்திரமாகிய திருவாதிரை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் புராணம்

கொற்றவன்குடி உமாபதிசிவம் அருளிச்செய்த மூலமும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணுமலை ஆதீனம் ஸ்ரீஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் அருளிய பதவுரையும்

பிரதி செய்தவர் : சேக்கிழார்தாசன் இராமசேஷன்

(சென்ற இதழ் 236–ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்தகைய புகழ்வேளாண் மரபிற்சேக்கி
　　ழார்குடியில் வந்தவருண் மொழித்தேவர்க்குத்
தத்துபரி வளவனுந்தன் செங்கோலோச்சுந்
　　தலைமையளித் தவர்தமக்குத் தனதுபேரு
முத்தமச் சோழப்பல்ல வன்ருனென்று
　　முயர்பட்டங் கொடுத்திடவாங் கவர்நீர் நாட்டு
நித்தனுறை திருநாகே சுரத்திலன்பு
　　நிறைதலினுன் மறவாத நிலைமை மிக்கார். 18

(இ-ள்): அத்தகைய புகழ் வேளாண் மரபில்-அத்தன்மையான புகழை யுடைய வேளாளர் மரபில்; சேக்கிழார் குடியில் வந்த-சேக்கிழார் குடியில் திருவவதாரஞ் செய்தருளிய; அருண்மொழித்தேவர்க்கு–அருண்மொழித் தேவருக்கு; தத்துபரிவளவனும்–தாவிச் செல்லுங் குதிரைக் கூட்டத்தையுடைய அநபாய சோழனும்; தன் செங்கோலோச்சுந் தலைமையளித்து–தனது செங்கோல் செலுத்தும்படியான மந்திரியாம் முதன்மையைக் கொடுத்து; அவர் தமக்கு–அவருக்கு; தனது பேரும்-தன்னுடைய பெயரையும்; உத்தமச் சோழப்பல்லவனென்ன-உத்தமச் சோழப்பல்லவனென்று; உயர் பட்டங் கொடுத்திட–உயர்ந்த பட்டமாகக் கொடுத்திடப் பெற்றுக்கொண்டு; ஆங்கவர் நீர்நாட்டு-அவ்விடத்து அச்சோழரது நீர்வளமுடையதாகிய சோழநாட்டில்; நித்தனுறை திருநாகேச்சுரத்தில்–சிவபிரான் வீற்றிருந்தருளும் திருநாகேச்சுரமென்னுந் தலத்தில்; அன்பு நிறைதலினுல்-அன்பானது நிறைதலினுல்; மறவாத நிலைமை மிக்கார்–மறவாத நிலைமையை உடையவராயிருந்தனர். (எ–று). தான்-அசை

தம்பதிகுன் றத்தூரின் மடவளாகந்
தானுக்கித் திருக்கோயி ருபித்தங்கண்
செம்பியர்கோன் றிருநாகேச்சுரம் போலீதுந்
திருநாகேச்சுரமெனவே திருப்பேர் சாற்றி
யம்புவியி லங்காங்க வைபவங்கட்
கானபரி கலந்திருநாள் பூசைகற்பித்
திம்பர்புகழ் வளவனர சுரிமைச் செங்கோ
லிமசேது பரியந்த மியற்றுநாளில். 19

(இ-ள்): தம்பதி குன்றத்தூரில்–தமது ஊராகிய குன்றத்தூரில்; மடவளாகந்தானுக்கி–மடவளாகத்தை ஏற்படுத்தி; திருக்கோயிருபித்து–(அதனுள்) திருக்கோயிலொன்றைப் பிரதிட்டை செய்து; அங்கண் செம்பியர்கோன் றிருநாகேச்சுரம்போல்–அவ்வூரில் அநபாய சோழனுடைய திருநாகேச்சுரம்போல; ஈதுந்திருநாகேச்சுரமெனவே திருப்பேர்சாற்றி–இதுவும் திருநாகேச்சுரமென்று திருப்பெயரிட்டு; அம்புவியிலங் காங்கவை பவங்கட்கானபரிகலம்–அத்திருநாகேச்சுரத்தில் நித்திய பூசையும் அதற்கங்கமான திருவிழாவுமாகிய சிறப்புகளைச் செய்தற்குரிய பரிசனங்களையும்; திருநாள் பூசை கற்பித்து–திருவிழாவையும் நித்திய பூசையையும் ஏற்படுத்தி; இம்பர் புகழ் வளவனரசுரிமைச் செங்கோல்–இவ்வுலகத்தார் புகழும் அநபாய சோழனுக்குரிய செங்கோலினை; இமசேது பரியந்தமியற்று நாளில்–இம்சேது பரியந்தம் நடாத்திவரும் நாளில். (எ-று).

மடவளாகம்–திருமதிலின் புறத்துள்ள வீதி. சிவாலய பூசைக்கு நித்தியமும் நைமித்தியமும் அங்கமாதலின் அங்காங்க மென்புழி நித்தியமும் அங்கமாயிற்று. அதனல் நித்தியம் நித்தியாங்கம், நைமித்தியம் நைமித்தியாங்கம் என்னும் நான்கையும் அங்காங்கமென இரண்டாயடக்கினர்.

கலகமிடு மமண்முருட்டுக் கையர் பொய்யே
கட்டிநடத் தியசிந்தா மணியை மெய்யென்
றுலகிலுள்ளோர் சிலர்கற்று நெற்குத்துண்ணு
துமிகுத்திக் கைவருந்திக் கறவை நிற்க
மலடுகறந் துளந்தளர்ந்து குளிர்பூஞ்சோலை
வழியிருக்கக் குழியில் விழுந்தளறுபாய்ந்து
விலைதருமென் கரும்பிருக்க விரும்பை மென்று
விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்து நொந்தார். 20

(இ-ள்): கலகமிடு மமண் முருட்டுக்கையர்–கலகத்தையே செய்கின்ற முருடர்களாகிய சமண வஞ்சகர்கள்; பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணியை–பொய்யினையே ஒரு காவியமாக ஏற்படுத்தி வழங்கச் செய்த சிந்தாமணி என்னும் நூலை; மெய்யென்றுலகிலுள்ளோர் சிலர் கற்று–உண்மையென்று கருதி இவ்வுலகத்திலுள்ளோர் சிலர் கற்றுக் கொண்டு; நெற்குத்துண்ணு துமிகுத்திக் கைவருந்தி–நெல்லினைக் குத்தி யுண்ணுமல் உமியைக் குத்திக் கைவருந்தியும்; கறவை நிற்க மலடு கறந்துளந்தளர்ந்து–கறவைப் பசுவிருக்க மலட்டுப் பசுவைக் கறந்து மனந்தளர்ந்தும்; குளிர்பூஞ்சோலை வழியிருக்க–குளிர்ந்த மலர்ச்சோலை வழியிருக்க; குழியில் விழுந்தளறு பாய்ந்து–பள்ளத்தில்

விழுந்து அதிலுள்ள சேற்றைப் பூசிக்கொண்டும்; விலைதரு மென்கரும்பிருக்க விரும்பை மென்று-மதிக்கத்தக்க கரும்பிருக்க இரும்பைத் தின்றும்; விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்து நொந்தார்-தீபமிருக்க மின்மினிப் பூச்சியைத் தீயென்று கருதிக் குளிர் காய்ந்தும் (வீண்படுதல் போல) நொந்தார்கள். (எ-று.)

இவ்விரண்டுங் குளகம்.

உமிகுத்தன் முதலிய தொழில் செய்தோர் தாம் கருதின பயனை யடையாமல் வருந்தினமை போலச் சிந்தாமணியைக் கற்றவர்களும் நல்ல பயனை யடையாது மனம் வருந்தினரென்பது கருத்து.

வளவனுங்குண் டமண்புரட்டுத் திருட்டுச்சிந்தா
மணிக்கதையை மெய்யென்று வரிசைகூர
வுளமகிழ்ந்து பலபடப்பா ராட்டிக் கேட்க
வுபயகுல மணிவிளக்காஞ் சேக்கிழார்கண்
டிளவரசன் றனைநோக்கிச் சமணர்பொய்நூ
லிதுமறுமைக் காகாதிம் மைக்குமற்றே
வளமருவு கின்றசிவ கதையிம் மைக்கு
மறுமைக்கு முறுதியென வளவன் கேட்டு. 21

(இ-ள்): வளவனுங் குண்டமண்புரட்டுத் திருட்டுச் சிந்தாமணிக் கதையை-அநபாய சோழனும் குண்டரான சமணர்கள் பொய்யாகிய, காப்பியம்போற் செய்த சிந்தாமணிக் கதையை, மெய்யென்று வரிசை உர வுளமகிழ்ந்து-உண்மையென்று சிறப்புமிகும்படி மனமகிழ்ந்து; பலபடப் பாராட்டிக் கேட்க-பலவாருகப் பாராட்டிக் கேட்டுக் கொண்டிருக்க; உபயகுலமணி விளக்காஞ் சேக்கிழார் கண்டு-தாய் தந்தையராகிய இருவர் மரபிற்கும் மாணிக்கதீபம் போன்ற சேக்கிழார் நாயனுர் அறிந்து; இளவரசன் றனை நோக்கி-இளமையுடையவனுகிய அநபாய சோழனைப் பார்த்து; சமணர் பொய்நூலிது-சமணர்களுடைய பொய்ம்மையாகிய சரித்திரமிது; மறுமைக்காகா திம்மைக்கு மற்றே-மேலும் இம்மைக்கும் மறுமைக்கும் உதவாது; வளமருவுகின்ற சிவகதை-வளப்பமுள்ள சிவசரித்திரமானது; இம்மைக்கு மறுமைக்கு முறுதியென வளவன்கேட்டு-இம்மைக்கும் மறுமைக்கும் உறுதிப் பயனைக் கொடுப்பதாமென்று சொல்ல; அநபாய சோழன் அதனைக் கேட்டு. (எ-று.).

அதிற் கூறுஞ்சரிதம் மெய்ப்பயன் குறித்து நில்லாமையிற் புரட்டென்றும் சில வேத விருத்தம் நீக்கிக் கொல்லாமை, பொய்யாமை முதலிய அறங்கள் எமது புராண இதிகாசங்களில் உள்ளனவேயன்றி வேறன்று என்பார் திருட்டென்றுங் கூறினர்.

அவகதையாய்ப் பயனற்ற கதையீதாகி
லம்மையுமிம் மையுமுறுதி பயக்கத்தக்க
சிவகதையேததுகற்ற திறமைப்பேரார்
சீவகசிந் தாமணிபோ லிடையில்வந்த
நவகதையோ புராதனமோ முன்னூலுண்டோ
நானிலத்துச் சொன்னவரார் கேட்டபேரார்
தவகதையோ தவம்பண்ணிப் பேறுபெற்ற
தனிக்கதையோ வடைவுபடச் சாற்றுமென்ருன். 22

(இ-ள்): அவகதையாய்ப் பயனற்ற கதையீதாகில்-இது அவலமானதாய்ப் பிரயோசனமற்ற வீண்கதையாகில்; அம்மையுமிம்மையுமுறுதி பயக்கத்தக்க சிவகதையேது-மறுமையும் இம்மையும் பயன்களைக் கொடுக்கத்தக்க சிவகதை யென்பது யாது; அதுகற்ற திறமைப் பேரார்-அதைக் கற்றுணர்ந்த திறமையுடையவர் யாவர்; சீவகசிந்தாமணி போலிடையில் வந்த நவகதையோ-இந்தச் சீவகசிந்தாமணியைப்போல் மத்தியில் வந்த புதிய கதையோ; புராதனமோ முன்னூலுண்டோ-அல்லது பழமையானதோ அதற்கு முதனூலொன்றுண்டோ; நானிலத்துச் சொன்னவரார் கேட்டபேரார்-அக்கதையை இவ்வுலகத்திற் சொன்னவர்கள் யாவர் கேட்டவர்கள் யாவர்; தவகதையோ தவம் பண்ணிப் பேறுபெற்ற தனிக்கதையோ-தவநெறியைக் கூறுங்கதையோ அல்லது தவத்தைச் செய்து பேறு பெற்றாரது ஒப்பற்ற சரித்திரமோ; அடைவுபடச் சாற்றுமென்றான்-அதை முறையாகச் சொல்லுமென்று அநபாய சோழன் கேட்டான். (எ-று.)

இவ்விரண்டுங் குளகம்.

அம்மை என்பது ஈண்டு மறுமை குறித்து நின்றது.

செம்பியர்பூ பதிமகிழ்ந்து வினவிக் கேட்கச்
சேக்கிழார் குரிசிலுரை செய்வார்ஞாலத்
தம்பலவர் திருத்தொண்டர் பெருமையாரு
ரடிகண்முத லடியெடுத்துக் கொடுக்கநாவ
னம்பிபதி னொருதிருப்பாட் டாகச்செய்த
நலமலிதொண் டத்தொகைக்கு நாரையூரிற்
றும்பிமுகன் பொருளுரைக்க நம்பியாண்டார்
சுருதிமொழிக் கலித்துறையந் தாதிசெய்தார். 23

(இ-ள்): செம்பியர் பூபதி மகிழ்ந்து வினவிக் கேட்க-அநபாய சோழன் மனமகிழ்ந்து வினாக்களாய்க் கேட்க; சேக்கிழார் குரிசிலுரை செய்வார்-சேக்கிழார் நாயனார் சொல்லுவாராயினார்; ஞாலத்தம்பலவர் திருத்தொண்டர் பெருமை-உலகத்தின்கண் சிவபிரானடியார்களது பெருமையைச் சொல்வதற்கு; ஆரூரடிகண் முதலடியெடுத்துக் கொடுக்க-திருவாரூர்த் தியாகப் பெருமான் தில்லைவாழந்தணர் என்று முதலடியெடுத்துக் கொடுத்தருள; நாவனம்பி பதினொரு திருப்பாட்டாகச் செய்த-திருநாவலூர்ச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதினொரு திருப்பாட்டாகப் பாடியருளிய; நலமலிதொண்டத் தொகைக்கு-நன்மை மிக்கத் திருத்தொண்டத் தொகைக்கு; நாரையூரிற்றும்பிமுகன் பொருளுரைக்க-திருநாரையூரில் வீற்றிராநின்ற பொல்லாப்பிள்ளையார் பொருளருளிச் செய்ய அதனால்; நம்பியாண்டார் சுருதி மொழிக்கலித்துறையந்தாதி செய்தார்—நம்பியாண்டார் நம்பி வேதவாக்கியமாகிய கலித்துறை யந்தாதி செய்தார்-நம்பியாண்டார் நம்பி வேதவாக்கியமாகிய கலித்துறைத் திருவந்தாதியைச் செய்தனர். (எ-று.)

(தொடரும்)



மெய்ப்பொருள் காண்பது அறிவு

அறிவை அமைக்கும் முறை-வள்ளுவர் வழியில்

டாக்டர் வித்துவான் திரு. வை. இரத்தினசபாபதி, எம்.ஏ., பி.ஒ.எல்., பிஎச்.டி.,

முன்னுரை :

அறிவைப் பற்றிய ஏதாவதொரு கருத்தைச் சொல்லத் தொடங்கியவுடன் அது ஒரு விளங்கிக் கொள்ள முடியாத பிரச்சினை என்று எடுத்த எடுப்பிலேயே ஒதுக்கித் தள்ளிவிடுவது கண்கூடு. சில செய்திகளை நாம் விளக்கமாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம் என்று எண்ணலாம். அவைகளிலுங்கூட, சில அடிப்படைக் கேள்விகளை எழுப்பினால் நாம் விடைகூற இயலாமல் தவிக்கும்போதுதான் நம் தெளிவின் உண்மை புலனாகும்.

அறிவு புதுமை இயல்புகளைக் கொண்டது. அறிவு என்று, நேற்று எதை ஏற்றுக்கொண்டோமோ அதையே இன்று அறியாமை என ஏற்றுக்கொள்ள வைக்கும் புதுமையைத் தனக்கே உரிய இயல்பாகக் கொண்டது அறிவு. இவ்வுண்மையை மிக எளிமையாக விளக்கி விடுகிறார் திருவள்ளுவர். ''அறிதோறு அறியாமை கண்டற்றால்" என்பது அவருடைய அனுபவ வாக்கு.

மேலும் ஒரு சிறப்பை அறிவின் இயல்பென நாம் கருதலாம். தன்னைப் பற்றிய உண்மையான வரலாற்றை ஆராய முற்படும் அறிஞர்களைத் திசைதிருப்பி விட்டு விடும் ஆற்றல் அறிவுக்கே உண்டு.

அறிவாராய்ச்சியியலை மேற்கொண்ட அறிஞர்கள் பலர் அறிவாராய்ச்சியியலிலிருந்து மெல்ல மெல்ல வெளியில் சென்று அறிவுக்கும் உள்ளத்துக்கும் உள்ள உறவில் ஈடுபட்டு அந்த ஈடுபாட்டின் உந்துதலால், அறிவாராய்ச்சியியலிலிருந்து உள்ளத்தியல் பற்றிய ஆரர்ய்ச்சிக்கு மெல்ல நழுவிச் சென்று, உள்ளத்தியல் பற்றிய ஆராய்ச்சியிலேயே தம் வாழ்நாளைக் கழித்தனர்.

வேறு சிலர் ஆராய முற்பட்ட தம் பணியிலிருந்து மெல்ல நழுவி அறிவுக்கு ஆதாரமான உள்பொருள் எது? அது ஒன்றா? இரண்டா? என்ற பொருளாராய்ச்சியில் சென்று நின்றனர்.

மேலைநாடுகளிற் காணப்பெறும் அறிவாராய்ச்சியியற் பணிகளைத் தொடங்கிய அறிஞர்கள் பலர் இவ்விரு வகைகளில் தங்கள் பணிகளைக் கொண்டுபோய் முடித்து அமைந்ததைக் காணலாம்.

வேறொரு புதுமையும் உண்டு. பொருளாராய்ச்சியை மேற்கொண்டு பணியாற்றத் தொடங்கியவர் அறிவாராய்ச்சியிலேயே தம் காலத்தை முடித்திருப்பதைக் காணலாம். இந்தியத் தத்துவ ஞானிகளில் நையாயிகர், தத்துவ உண்மைகளை விளக்க எடுத்துக் கொண்ட

முயற்சிகள் அறிவாராய்ச்சியை விளக்கிய அவ்வளவிலேயே நின்று விட்டமையைக் காணலாம். அறிவாராய்ச்சியிலே ஓரளவு தெளிய உணர்த்திய பெருமை நையாயிகர்களுக்கே உரியது என்பது தத்துவ உலகின் பொதுக் கருத்து. இத்தகைய தன்மை வாய்ந்த அறிவை நாடிபிடித்துப் பார்த்து, அதுபற்றிய சில உண்மைகளைத் தெளிவுபெற வரையறுத்து உணர்த்திய பணியில் தலைசிறந்தவராகத் திருவள்ளுவரைக் கொள்ளலாம். அவர் வழியில் நின்று அறிவை வளர்க்கும் வழியை இங்கே ஆராயலாம்.

இரண்டு குறட்பாக்கள்

'அறிவு' என்று முடியும் குறட்பாக்கள் பலவற்றை நாம் திருக்குறளிற் காணலாம். அவைகளெல்லாம் அறிவைப் பல கோணங்களில் நின்று ஆராய்ந்து கண்ட உண்மைகளை வெளியிட அமைக்கப் பெற்றவை. ஆயினும் அறிவை வளர்க்கும் முறையை இரண்டே குறட்பாக்களில் அமைத்துக் காட்டுகிறார்.

> எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு.
>
> எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு.

இவ்விரண்டு குறட்பாக்களும் முறையே அறத்துப்பால் மெய்யுணர்தல் என்ற அதிகாரத்திலும், பொருட்பால் அறிவுடைமை என்ற அதிகாரத்திலும் காணப்பெறுகின்றன. அமைப்பால் ஒன்றாக இருக்கும் இவ்விரண்டு குறட்பாக்களும் பாலாலும், அதிகாரத்தாலும் வேறுபடுகின்றன. அக் குறட்பாக்களுக்கு எழுதப்பெற்ற உரைகளும் எத்துணையளவு வேறுபட்டு விட்டன என்பதையும் நாம் காணுதல் வேண்டும்.

அறிவு வருதற்குரிய வழிகள்

(1) உலகம் பல்பொருள் நிறைந்த ஒரு பெட்டகம். உலகப் பொருள்களோடு நாமும் பொருளளவில் நின்று இணைகிறோம். இது ஒருவகைப் பொருளிணைப்பு முறை. இதன் மூலம் நமக்குச் சில செய்திகள் கிடைக்கின்றன.

(2) உலகில் சில பொருள்களைப் பற்றிப் பிறர் சொல்லக் கேட்கிறோம். இதுவும் ஒருவகையில் பொருளிணைப்பு முறைதான். ஆனால் சொற்களின் மூலம் பொருள்களோடு தொடர்பு கொள்கிறோம். இத்தகைய தொடர்பு மூலமாகவும் நமக்குச் சில செய்திகள் கிடைக்கின்றன.

செய்திகள் அறிவாகா

செய்தி வேறு; அறிவு வேறு. செய்திகளைக் கூறும் வாக்கியங்கள் அறிவை அடிப்படையாகக் கொண்ட அளவையியல் வாக்கியங்கள் ஆகா என்பதை உணரவேண்டும். 'புல் பசுமை ஆனது' என்பது செய்தி. இவ் வாக்கியம் அளவையியலார் மேற்கொள்ளக்கூடிய அறிவியல் வாக்கியமாகக் கருதப்பெறாது. இன்னும் ஒருபடி மேலே சென்று அவர்கள் இக்கருத்தை வேறு வகையாகவும் விளக்குவதைக் காணலாம். எழுவாய் பயனிலைகளோடு அமைந்து ஒரு பொருளைத் தெரிவிக்கக்

கூடியது செய்தி வாக்கியம். அந்த வாக்கியத்துக்கு ஒரு பொருள் (அர்த்தம்) உண்டு என்பதைத் தவிர, அது உண்மை என்று கூட ஒப்புக் கொள்ள முடியாது என்பது அவர்கள் வாதம். "செவ்வாய்க் கிரகத்தில் அறுவகை உயிர்கள் இருக்கின்றன" இது செய்தி வாக்கியம். எழுவாய் பயனிலே இருக்கின்றன எனவே அது வாக்கியம். அதற்கு ஒரு பொருள் (அர்த்தம்) உண்டு. ஆனால் அது உண்மையை விளம்பும்– அறிவைப் புகட்டும் வாக்கியம் என்று கூற முடியாது.

மாம்பழத்தைப் பற்றிய எவ்வளவோ செய்திகளை நாம் சேகரித்து வைத்திருக்கலாம். அவைகளையெல்லாம் தொகுப்பாக ஆக்கி, ஒரு முடிச்சைப் போட்டு, இது மாம்பழம் என்று கூறினால் மாம்பழத்தைப் பற்றி செய்திகள் பலவற்றைக் கொண்ட முடிச்சு எனப் பெயர் பெறுமே யன்றி மாம்பழம் பற்றிய அறிவாக அது ஆகாது.

கம்பர் இராவணனை "ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவு அமைந்தான்" என்று குறிப்பிடுகிறார். ஆயிரக்கணக்கான வேத நெறிகளை உணர்ந்தான் இராவணன் என்பது வேறு; அறிவு அமைந் தான் என்பது வேறு. உணர்ந்தான் என்ற சொல்லின் மூலமாகக் கம்பர் இராவணனை நமக்குக் காட்ட விரும்புவது, அவன் வேதத்தைப் பற்றிய செய்திகள் பலவற்றைத் தெரிந்து வைத்துக் கொண்டவன் என்பதையே. அறிவு அமைந்தான் என்பது உணர்ந்தான் என்ற சொல்லால் உணர்த்தப் பெறும் தன்மை அன்று.

பெரியபுராணம், கம்பராமாயணம், திருக்குறள் முதலியவைகளைப் பற்றி எழுதுவோரும், சொற்பொழிவு செய்வோரும், கதா காலட்சேபங் களாக அமைத்துச் சுவையாக மக்களுக்கு வழங்குவோரும் பலருளர். இவர்கள் மேற்கண்ட நூல்களின் பெருமைகளை ஐந்து மணித்துளிகளில் சொல்லவேண்டும் என்று கேட்டாலும், பலமணிகளில் சொல்ல வேண்டும் என்று கேட்டாலும் அவ்வவற்றிற்கேற்பச் சுருக்கியும் விரித்தும் சொல்ல வல்லவராக அமைந்திருப்பதையும் காணலாம். இவர்கள் அனைவரையுமே மேற்கண்ட நூல்களின் செய்திகளை அறிந்தவர்கள் என்று கூற நாம் தயங்க வேண்டுவதில்லை. ஆனால் அவைகளில் அறிவு அமைந்தவர்களா? என்ற வினாவுக்கு உரிய விடையை அவ்வளவு எளிமையாகச் சொல்ல முடியாது.

இரண்டு துறவிகள் கற்றுணர்ந்த மேதைகள். சிவம்பெருக்கும் சீலர்கள். இருவருடனும் கலந்து, நெருங்கிப் பழகும் வாய்ப்பை இறையருளாற் பெற்றவன் யான். துறவிகள் என்ன என்ன பொருள் களை வைத்துக் கொண்டிருக்கலாம் என்றெல்லாம் வினாக் கணைகள் தொடுக்கின்ற காலம் இது. வைத்திருக்கும் பொருள்களை வைத்துக் கொண்டு துறவின் தூய்மையை எடைபோடும் காலம் இது.

ஒருநாள் ஒரு துறவிக்கு அருகில் நின்றிருந்தேன். அவர் தம் கைப்பெட்டியைத் திறந்ததும், அதனுள் இரண்டு பார்க்கர் பேனாக்கள் இருந்தன. ஒன்று தான் வைத்திருந்தது. இன்னொன்றை அன்பர் ஒருவர் அன்பளிப்பாகக் கொடுத்தது. இரண்டையும் ஒருசேரப் பார்த்த அத்துறவி, தான் வைத்திருந்த பார்க்கர் பேனாவை எடுத்து, என்னிடம் கொடுத்து, "என்னிடம் ஒன்று அதிகமாக இருக்கிறது, நீ வைத்துக் கொள்" என்று அருளினார். பிறிதொரு நாள் அதே துறவி, ஒரு அலு வலகத்துக்குச் செல்லும்போது, "சில குறிப்புக்கள் எடுக்க வேண்டும். பார்க்கர் பேனா கையெழுத்துப் போடத்தான் பயன்படும். இடையிலேயே

இங்க் நின்றுவிடும். பால் பாயிண்ட் பேனு இருந்தால் நல்லது" என்று கூற, அன்றும் இறையருளால் பக்கத்திலிருந்த நான், என் பையிலிருந்ததைக் கொடுக்க, எடுத்துச் சென்றருளினர். கொண்டும் கொடுத்தும் ஆட்படும் நிலை இது.

இன்னொரு துறவி, "நீ கையில் கட்டியிருக்கும் கைக்கடிகாரம் அழகாக இருக்கிறது; அதைப்போல் ஒன்று எனக்குத் தேவை" என்று அருளினர். காலத்தொடுபட்டு, காரியத்தைக் குறித்த காலத்தில் முடிக்க வேண்டும் என்ற நிலையில் தம்மைத் தொண்டுக்கு ஆளாக்கிக் கொண்ட அந்த சிவம் பெருக்கும் சீலருக்குக் கைக்கடிகாரம் மிகைப் பொருள் என்று நான் கருதமாட்டேன்; அவசியத் தேவை என்பது மட்டுமன்று; அவசரத் தேவையுங்கூட. ஆனல் ஒரு துறவி கைக்கடிகாரத்தை விரும்புவது அழகின் அடிப்படையில் அன்று; 'உன் கையில் இருக்கும் கடிகாரம், சரியான காலத்தைத் துல்லியமாகக் காட்டும் தன்மையுடையதா?' எனக்கேட்டு, "அப்படியானல் நீ கட்டிக் கொண்டிருப்பதையே எனக்குக் கொடுத்துவிடு" என்று கேட்டிருந்தால் உடனே கொடுத்துவிடுவேன்.

முன்னர்க் கூறிய துறவி, துறவுத்தன்மையை உணர்ந்து அறிவு அமைந்தவர். பின்னவர் துறவு பற்றிய செய்திகளைத் தொகுத்தமைத்து உணர்ந்தவர்.

செய்தியை அறிவாக அமைக்கும் முறை

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களின் மூலம் பொருள்களோடு தொடர்பு கொள்கிருேம். தொடர்பின் மூலமாகப் பொருள் தன்மை நமக்குப் புலப்படுகிறது. இத்தகைய தொடர்பின் மூலம் நமக்குக் கிடைத்த செய்திகள் பொருளின் தன்மைகளை நமக்குத் தெரிவிப்பவைகளே. அத்தன்மைகளைத் தெரிந்து வைத்துக் கொண்டிருப்பது அறிவாகாது.

மாம்பழத்தைச் சுவைக்கிருேம். மாம்பழம் இனிப்பாக இருக்கிறது என்பது நாம் மாம்பழம் என்ற பொருளோடு ஏற்படுத்திக் கொண்ட தொடர்பு மூலமாகக் கிடைக்கப் பெற்ற செய்தி. இச்செய்தியை அறிவாக அமைத்தல் வேண்டும். எவ்வாறு?

பழமானது ஒரு பொருள். இனிப்பு அதன் தன்மை. பொருளுக்கும் தன்மைக்கும் உள்ள சம்பந்தத்தை நம் அனுபவத்தால் தெரிந்து கொண்டோம். ஆனுல், இனிப்பு என்ற தன்மையின் முழுமைபெற்ற அமைப்பு ஒன்று உண்டு. முழுமையான இனிப்புத் தன்மையை எத்தனை கோடி கூறிட்டுப் போட்டால், கிடைக்கும் மிகச்சிறிய ஒரு கூறு இனிப்பே இந்த மாம்பழத்தில் அமைந்திருக்கிறது என்ற கருத்தை அளிக்கும் வினுக்கள் பலவற்றை முறையாக எழுப்பி ஆராய்தல் வேண்டும். இவ்வகை ஆய்வை மேற்கொள்ளும்போது 'இனிப்பு' என்ற தன்மையை முற்றுக ஆராய வேண்டிய நிலைமை உண்டாகிறது. இவ்வாறு ஆராய்ந்தால்தான் நாம் சுவைத்த அந்த ஒரு குறிப்பிட்ட மாம்பழத்துக்கும் இனிப்புக்கும் உள்ள சுவையின் அளவை, தொடர்பை வரையறுத்துக் காட்ட முடியும். அப்பொழுதுதான் மாம்பழத்தின் இனிப்பைப் பற்றிய அறிவு நமக்குள் அமைகிறது.

(தொடரும்)



காரைக்காலம்மையார்

பழ-தரும ஆறுமுகம்

மானமிகு தருமத்தின் வழி நின்று வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர், குடிதுவன்றி ஓங்குபதி
கூனல்வளை திரைசுமந்து கொண்டேறி, மண்டுகழிக்
கானல்மிசை உலவுவலம், பெருகுதிருக் காரைக்கால்

எனச் சேக்கிழார் பெருமானால் வியந்து போற்றப்பெற்ற காரைக்காலின்கண் வாழ்கின்ற வணிகர் குலத்தலைவர் தனதத்தர். அவர் தவத்தால், பொங்கிய பேரழகு மிக்க, திருமடந்தை அவதரித்தாள் என வந்து, வணிகர் பெருங்குலம் விளங்கப் பிறந்தருளினார், புனிதவதியார். அணிகிளர் மெல்லடியானது தளர்வுற்று அசையும் நடைப் பருவத்திலேயே பரம்பொருளாகிய சிவபெருமான் திருவடிக்கு அடிமை செய்யும் பாங்கு பெற்றார். பல்கிப்பெருகிய சுற்றத்தவர்களனைவரும் மகிழும்படியாகப் பயில்கின்ற பருவச்சிறப்பெல்லாம், செல்வமிக்க தந்தையாராகிய தனதத்தரால் திருப்பெருகும் செயல்புரிய, பாராட்டும் சீராட்டும் பெற்று, அழகின் கொழுந்தெழுவதென்ன வளர்கின்றார் புனிதவதியார்.

பயில்வன எல்லாம் அண்டர்பிரான் திருவார்த்தை. ஆகையினாலே, சிவனடியார்கள் வந்தால் தொழுது வணங்கும் தூய கொள்கையினைப் பின்பற்றினார். உறுப்பு நூலவர் (சாமுத்திரிகா லட்சணங்களை அறிந்த அறிஞர்கள்) நல்லவை என உரைக்கும் நலங்களெல்லாம் நிரம்பி, அழகு பெருகிவரும் "இல்லிகவாப் பருவத்தில்", வணிகர்கள் தம் குலமரபினுக்கு ஏற்ப பெண் கேட்க முற்பட்டனர். நீடிய சீர்க்கடல் நாகப்பட்டினத்தில் வாழ்கின்ற, உலகின்கண் பாடு பெறு புகழ் வணிகர் என்று போற்றப் பெறுகின்றவருமாகிய நிதிபதி என்பவரின் மகனாகிய பரமதத்தனுக்குப் புனிதவதியாரைப் பெண் கேட்பதற்காகப் பெரியவர்கள் சிலர் காரைக்காலுக்கு வந்தார்கள் அவர்கள் தனதத்தரின் வீட்டுக்கு வந்து, அவரை நோக்கி "நீ பெற்றெடுத்த பெண் கொடியாகிய புனிதவதியை, மரபினுக்கு ஏற்கும் முறைமையில், நாகப்பட்டினத்தில் வாழ்கின்ற பெரு வணிகராகிய நிதிபதியின் மைந்தன் பரமதத்தனுக்கு மணம் புரிவிக்க லாம்" என்று தம் கருத்தை அறிவித்தார்கள். தனதத்தரும் தம் இசைவைத் தெரிவித்தார்.

பெரியவர்கள் நாகப்பட்டினம் சென்று தனதத்தரது இசைவை நிதிபதியிடம் தெரிவித்தனர். அது கேட்டு நிதிபதி பெரும் சிறப்புப் பெற்றவர் போல் மிக்க மகிழ்ச்சி கொண்டார். உடனே திருமணத்திற் கான ஏற்பாடுகளையும் செய்யத் தொடங்கினார்.

நிகழும் பிரமாதீச ஆண்டு பங்குனித் திங்கள் 26-ஆம் நாள் (8-4-74) திங்கட் கிழமையன்று காரைக்காலம்மையார் திருநட்சத்திரம் சுவாதி,

மங்கலநாள் நிச்சயித்து, செல்வச் சிறப்புப் பொருந்திய சுற்றத்தவர்களுக்கெல்லாம், அழைப்பு அனுப்பி, அவர்கள் பரமதத்தனுக்கு மணவணியின் எழில்விளக்கி பணை முரசம் எழுந்தார்ப்ப, காரைக்கால் வந்து சேர்ந்தார்கள்.

தனதத்தரின் அணிமாடத்திற் சென்று நூல்களில் தெளிவாக்கப் பெற்ற முறைகளின்படி, செயல் முறைமை (நிகழ்ச்சி நிரல்) செய்தமைத்து, தளிரடியும், மென்னகையும் உடைய மயிலைப் போன்ற சாயலும் உடையவராகிய புனிதவதியாரை, தாதவிழ்தார்க் காளையாகிய பரமதத்தனுக்கு, சுற்றத்தவரெல்லாம் மகிழ்ந்து போற்றும்படியாகத் திருமணம் செய்தார்கள்.

மங்கலமா மண வினைகள் முடித்து, இயல்பாக இருக்கும் நாளில் தங்கள் குடிக்கு ஒரேயோர் அரும்புதல்வி ஆதலினால், அவள் புகுந்த வீடாகிய நாகைப்பட்டினம் போகாமல் காரைக்காலிலேயே தங்கியிருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து, அருகிலேயே அணிமாடம் ஒன்றை அமைத்தார் தனதத்தர்.

மகட்கொடையின் மகிழ்சிறக்கும்படியாக எல்லையற்ற அளவுக்குச் சீர்வரிசைகள் செய்து கொடுத்தார். பரமதத்தனும், தகைப்பில் பெருங் காதலினால், தங்குமனை வளம்பெருக்கி, மிகப்புரியும் கொள்கையினில் மேம்பாடு கொண்டு விளங்கினான்.

அப் பரமதத்தன் தன் இல்வாழ்க்கை அருந்துணையாய் அமர்கின்ற பூங்குழலாராகிய புனிதவதியாரும், சிவபெருமான்பால் வைத்த பேரன்பானது ஒழிவின்றி மிகப்பெருக, பாங்கில் வரும் மனையறத்தின் பண்பு வழுவாது, வாழ்ந்து வந்தார்.

சிவனடியார்கள் வந்தால், நல்ல உணவளித்தும், செம்பொன்னும் நவமணியும் நல்ல ஆடைகளும், அவரவர் தகுதிக்கேற்ப வேண்டுவன கொடுத்தும், சிவபெருமான் திருவடிக்கீழ் வைத்த உணர்வானது பெருகி வளரும்படியாக ஒழுகி வந்தார்.

பாங்குடைய இல்லற நெறியிலிருந்தும் பிறழாது வாழ்ந்து வருகின்ற வனாகிய பரமதத்தன் வாணிபம் பேசுமிடத்து வந்த வணிகர்கள் சிலர் இரண்டு மாங்கனிகள் கொடுத்தார்கள். அவற்றை வாங்கிய பரமதத்தன் தன் பணியாளிடம் கொடுத்து வீட்டில் கொடுத்து வரச்சொன்னான்.

பணியாளன் கொண்டு வந்து கொடுத்த மாங்கனிகள் இரண்டையும் வாங்கி வைத்தார் புனிதவதியார். அச்சமயத்தில் சிவனடியார் ஒருவர் மிக்க பசியுடன் வீட்டினுள் வருவதைக் கண்டார். 'சிவனடியாராகிய இவரது பசியைத் தீர்ப்பேன்,' என எண்ணி, அவருக்குப் பாதங்கள் விளக்கத் தண்ணீர் கொடுத்து கொடுமையான பசித்துயர் ஒழியும் படியாக நல்ல விருந்தளித்தார். இவ்வாறு விருந்தளிக்கும்போது, கறியமுது போதாது போக, தாமரை மலர்மேல் இருக்கின்ற திருமகளைப் போன்றவராகிய புனிதவதியார், சிவனடியார்க்கு விருந்தளிப்பதற்கு மேல் பேறு வேறொன்றில்லை என எண்ணி தன் கணவராகிய பரமதத்தன் முன்பு பணியாளனிடம் கொடுத்தனுப்பிய நல்ல நறு மாங்கனிகள் இரண்டில் ஒன்றை விரைந்து கொண்டு வந்து, சிவனடியாருக்கு அளித்து உண்பித்தார்.

முதுமைத் தளர்ச்சியினலும், விரைந்து பற்றிய பசியாகிய தீயின் நிலையாலும், அயர்வுற்று வந்த சிவனடியார், கிடைத்த இனிய உணவை, மாங்கனியோடு உண்டு, பூப்பயில்மென்குழல் மடவராகிய புனிதவதியாரைப் பாராட்டிச் சென்ருர்.

சிவனடியார் சென்றபின், பரமதத்தன் நண்பகலில் வீட்டிற்குவந்து, நீராடி, உணவருந்திவர, கற்புடைய பெண்ணரசியாகிய புனிதவதியார். கணவனுக்கு உணவளித்தார். இன்னடிசில் கறிகளுடன் இட்டதன் பின், கணவனுர் முன்பு கொடுத்தனுப்பிய மாங்கனிகளில் இருந்த ஒன்றைக் கொண்டு வந்து, கலத்தில் இட்டார். அம்மாங்கனியின், மதுரச்சுவையைச் சுவைத்த பரமதத்தன், "இன்னும் ஒரு மாங்கனி இருக்குமே, அதனையும் கொண்டுவா?" என்று வேட்கையுடன்கூற, அதனை எடுத்துவரச் செல்பவர்போல், புனிதவதியார் உள்ளே சென்ருர்.

சென்றவர், 'இன்னொரு மாங்கனியைச் சிவனடியாருக்களித்து விட்டோமே! இப்போது கணவனுர் மாங்கனியைக் கேட்கிருரே! இப்போது என்ன செய்வது?' என்று அயர்ந்தார். துயருற்றபோது உதவும் சிவபெருமான் திருவடிகளை மெய்ம்மறந்து நினைந்து உள்ளம் நெகிழ உணர்தலும், இறைவன் திருவருளால் 'அதிமதுரக் கனி' ஒன்று அவர் கையில் வந்தது. அதனைக் கொண்டுவந்து பரமதத்தனிடம் கொடுக்க அவன் அதனை வாங்கியுண்டு, அதில் உற்றசுவை, அமிழ்தினும் மேற்பட்டதாக, "இக்கனி, மூவுலகிலும் பெறற்கரியது, இதனை எங்கு பெற்ருய்" என்று புனிதவதியாரை வினவ, அவர், இறைவன் திருவருள், வெளிப்பட இயம்புந்தரமன்று என்று உடனடியாக மறுமொழி செய்யவில்லை. இருந்தாலும், "செய்தபடி சொல்லுவதே கற்புடைய மனைவியின் கடனுகும் என்று எண்ணி, நடந்ததனை நடந்தவாறு கணவனுரிடம் கூறினுர். எல்லாம் சிவபெருமான் திருவருள் என்பதனை நம்பாத பரமதத்தன் "தேசுடைய சடைப்பெருமான் திருவருளேல், இன்னமும் ஓர் ஆசில்கனி அவனருளால் அழைத்தளிப்பாய்" என மொழிந்தான்.

உடனே புனிதவதியார் மனையுட் புகுந்து இறைவனை நோக்கி, "திருவருட் பெருங் கருணை கொண்டு முன்பு மாங்கனி ஒன்று அளித்தது போல், இன்னும் ஒன்று அருளிச் செய்யாவிட்டால், உமது திருவருளால் கனி பெற்றேன் என்று கணவனுரிடம் சொன்ன என் சொல் பொய்யாகும்" என்று வேண்டினுர். உடனே மாங்கனியொன்று புனிதவதியார் கையில் வந்தது. அதைக் கொண்டு சென்று பரமதத்தனிடம் கொடுத்தார். அவனும் வியப்பு மேலிட அதனை வாங்கினுன்.

பரமதத்தன் கையில் வந்ததும் மாங்கனி காணுமற் போயிற்று. அவன் அச்சமும் தடுமாற்றமும் அடைந்து, புனிதவதியாரைத் "தெய்வப் பெண்" எனக் கருதி, அவரைப் பிரிந்து வாழவேண்டுமென்று துணிந்து, தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்காது, அவரோடு தொடர்பின்றி வாழ்ந்து வந்தான்.

இவ்வாறிருக்கையில் பரமதத்தன், ஒரு மரக்கலம் செய்வித்து, வாணிபம் செய்யப்புகும் பிறநாட்டினரால் விரும்பப்படும் அரும் பொருள்களை அக்கப்பலில் ஏற்றி, ஒரு நல்ல நாளில் வருண பகவானைத் தொழுது கப்பலைச் செலுத்துகின்ற மாலுமிகளோடும் ஏறிக் கடல் கடந்து சென்று வாணிபம் செய்து, மீண்டு பாண்டிநாட்டுப் பட்டினம் ஒன்றை வந்தடைந்தான்.

ஒப்பற்ற பெருஞ் செல்வம் பெருகிற்று. அவ்வூரில் ஒரு பெரு வணிகரின் மகளைச் செல்வச் சிறப்போடு திருமணம் செய்து கொண்டான். கடல் வாணிபத்தில் மிக்க புகழ்பெற்று, அவ்வூர் வணிகரோடும் "சங்கநிதி பதுமநிதி இரண்டுக்கும் உரிமையுடையவன் போல்' வாழ்ந்து வரும் நாளில், "பரமதத்தனுடைய மனைவியார் கருவில் பெருகொளி விளக்குப் போலோர் பெண்கொடி" மகளாய்ப் பிறந்தாள். முன்னாளில் தான் சேர்ந்து வாழ்வதற்கு அஞ்சிப் பிரிந்து வந்த 'ஒரு பெரு மனைவியாராகிய' புனிதவதியாரைத் தன் குலதெய்வம் என்றே கருதி, அவர் பெயரைத் தன் இரண்டாம் மனைவியாருக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு வைத்துப் போற்றினான்.

பரமதத்தன் பாண்டிநாட்டிலே இவ்வாருக வாழ்ந்திருக்க, புனிதவதியார் காரைக்காலில் மன்னிய கற்பினோடும் மனையறம் புரிந்து வாழ்ந்து வந்தார். "வாணிபத்தின்பொருட்டுக் கடல் கடந்து சென்ற பரமதத்தன், பாண்டிநாட்டில் ஒரு பட்டினத்தில் பெருஞ் செல்வச் சிறப்புடன் வாழ்ந்து வருகின்ருன்" என்ற செய்தியைக் கேள்வியுற்று புனிதவதியாரின் சுற்றத்தார். கவலை கொண்டு, உறவினர் சிலரைப் பரமதத்தனிடம் அனுப்பி அவன் நிலைமையை உணர்ந்து, "அவனிடத்திலே புனிதவதியாரைக் கொண்டு சேர்த்தலே நன்று" எனக் கருதினர்கள்.

மாமணிச் சிவிகைதன்னில் மடநடை மயில் போன்ற புனிதவதியாரைத் 'தாமரை மலரில் வீற்றிருக்கும் தனித் திருமகளே' என எண்ணி ஏற்று, சுற்றத்தாரும் உடன் புறப்பட்டு, சில நாட்களில் பாண்டி நாட்டை அடைந்தார்கள். பரமதத்தன் வாழ்கின்ற மாநகரின் எல்லையை அடைந்ததும், முதல் மனைவியராகிய புனிதவதியாரைக் கொண்டு வந்தணைந்த தன்மையை பரமதத்தனுக்குச் சொல்லியனுப்பினர்கள். இச்செய்தியைக் கேள்வியுற்ற பரமதத்தன், அச்சங்கொண்டு, தன் இரண்டாவது மனைவியையும், மகளையும் அழைத்து 'எதிர் கொண்டு சென்று வரவேற்பேன்' எனக் கருதி, புனிதவதியார் இருக்குமிடம் வந்தடைந்தான்.

வந்து சேர்ந்த பரமதத்தன் மனைவியுடனும், மகளுடனும் மானிளம் பிணைபோல் நின்ற முதல் மனைவியாராகிய புனிதவதியாரின் திருவடிகளிலே, தாழ்ந்து, "அடியேன் உமது திருவருளினலே வாழ்கின்றேன்! இப்பெண்மகவுக்கு உமது திருநாமத்தையே வைத்திருக்கிறேன்" என்று பணிந்து வீழ்ந்தான்.

கணவனுகிய பரமதத்தன் தன்னை வணங்குவதைக் கண்ட புனிதவதியார், அச்சத்துடன் சுற்றத்தார்பால் ஒதுங்கி நின்ருர். உடனிருந்த சுற்றத்தார் மிகவும் வெள்கி, "உன் மனைவியை நீ வணங்குவதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டார்கள்.

பரமதத்தன் அவர்களை நோக்கி "புனிதவதியார் சாதாரணமான மானிடப் பெண் அல்ல! அவரைத்தெய்வப் பெண் என்று கருதி, விட்டுப் பிரிந்த பிறகு பெற்ற என் பெண்ணுக்கு அவருடைய புனிதத் திருநாமத்தை இட்டேன்! ஆகையினல் அவர் திருவடிகளிலே பணிந்தேன். நீங்களும் போற்றுதல் செய்யுங்கள்" என்று சொன்னன்.

(தொடரும்)

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

'உள்ளம் உருகில் உடனுவர்' (க)

சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் திருவாய்மூர் வழிபாட்டிலே,

> பண்ணிற் பொலிந்த வீணையர் பதினெண் கணமும் உணரா நஞ்சு
> உண்ணப் பொலிந்த மிடற்றினுர் உள்ளம் உருகில் உடனுவார்
> சுண்ணப்பொடி நீறணிமார்பர் சுடர்பொற் சடைமேல் திகழ்கின்ற
> வண்ணப் பிறையோ டிவராணீர் வாய்மூர் அடிகள் வருவாரே.

என்றருளினுர். இத்திருக்கடைக் காப்பில் 'உள்ளம் உருகில் உடனுவார்' என்ற தொடர்க்குப் பொருள் உணர்தல் எளிது என்று பலயாண்டாகக் கொண்டிருந்த எண்ணம், ஒருநாள் திருவாய்மூர்க்கு எழுந்தருளிய கயிலைக் குருமாமணி, அங்கு வழிபட்டவுடனே திரு. வேலாயுத வோதுவார் மூர்த்தியைக் கடைக்கணித்தருளி, "இதன் பொருள் என்ன?" என வினவியதும் எம்பால் திருநோக்கம் வைத்துக் குறிப்பறியச் செய்தது. 'வெண்ணெய் உருகுவதுபோல உள்ளம் உருகினுல் வள்ளல் உடனுயிருந்தருள்வார்' என்று சொல்லிவிட்டுப் புன்னகை தோற்றக் கண்டு "என்ன ஐயா, 'பொடிவைத்து நகை செய்கின்றீர்'" என்று, அஃது இட்ட பணியைத் தட்டான் என்றறிந்தமை தோற்றி விளக்கப் பணித்தருளியது.

அவ்வருளாணையைத் தலைமிசையேற்று, எங்கேனும் வீற்றிருந் தருளுங்கால், வரலாற்று முறைமையின் அதன் மெய்ப்பொருளை அருணூலாட்சியைக் கொண்டு தோற்றும் விருப்புள்ளேம் என்றேம். அது நன்றே என்று இசைந்தருளிற்று. மீண்டு அதுவும் நினைவில் வந்திலது. பொருளும் வெளிப்பட்டிலது. பின்னர்ச் சிலயாண்டு கடந்து தில்லையிற் சொல்ல வாய்த்தது. அதன்பின் அநுபவம் வளர விளங்கிய பொருளைச் சைவசீலர் அறியத் தொடர்ந்து அருளோசை முழங்கும். முழங்கத் தொடங்கும் இதில், அக் காழிவேந்தரது கருணை மொழியைத் திருவியலூர் உய்ய வந்த தேவநாயனுர் பொன்னேயெனப் போற்றியது இது:

> "உள்ளம் உருகில் உடனுவர் அல்லது
> தெள்ள அரியர் என்றுந்தீபற
> சிற்பரச் செல்வர் என்றுந்தீபற."

இத்தாழிசை, ஆன்ம சொரூபம் மறைந்து சிவசொரூபமேயாய்ச் சிவனென நிற்கும் உண்மை உணர்த்தியது. சிற்பரச் செல்வர் ஆன்ம போதத்தால் ஆராய்ந்து கண்டு கூடுதற்கு அரியர். சித்துக்குப் பரமான இன்பமாகிய செல்வர் ஆதலின் இழிந்த சித்தாய பசுஞானத்தாலும், அசித்தாய பாசத்தின் வாயிலாய்ப் புலப்படும் ஐந்தாலும் தெள்ள அரியர். அரியராயினும், உள்ளம் உருகில் தெள்ள எளியர். எளிமை யாவது உடனுதல். பழைய வுரையிலே 'ஏகீபாவம் பிறந்து ஒரு நீர்மை

யாய் நிற்கும் உபாயம்' என்று உள்ளம் உருகுதலை உணர்த்துகின்றது. ஏகீபாவம் பிறத்தல் உள்ளம் உருகலால், சிவம் உடனுதல். அவ்வுடநந்தையை ஒரு நீர்மை என்றனர். ஏகீபாவம்-ஒருநீர்மை. ஆன்மபோதம் மறைந்து சிவமேயாய் நிற்றல் ஒரு நீர்மையாய் நிற்றல். உடனுதலும் அன்னதே.

'உள்ளம்' என்ற சொல் உள்ளு (நினை)தற்குக் கருவியாய் உள் இயங்கும் நெஞ்சு (மனம்) குறிப்பதுமாகும். அந்நெஞ்சு கருவியாக் கொண்டு உள்ளும் வினையைச் செய்து கொள்ளும் உயிரைக் குறிப்பது மாகும். உமாபதி சிவம் 'உள்ளிடம் உள்ளிடமாம்' என்றருளினர். உள்ளும் (நினைக்கும்) இடம், உள் இடம் (-திருமூலட்டானம்). நினை+து=நினைத்து, நினச்சு, நினைச்சு. நினைந்து, நினைஞ்சு, நினஞ்சு, நெனஞ்சு, நெஞ்சு எனத்திரிந்த முறையை யுணர்க. 'நெஞ்சே நீ நினையாய்' என்றருளினர் அப்பர். நெஞ்சு நினையுங்கருவி என்றதில் ஐயம் இல்லை.

உள்ளம் உருகல் என்ருல் நெஞ்சுருக்கத்தைக் கொள்ளலாம். பிழை ஆகாது. இங்கு உயிர் முனைப்பறல் ஒன்றே உள்ளம் உருகல் ஆகும். பழக்கம் தவிரல், நாம் அறல், பற்று அறுதல், தெருள் மறத்தல், கருத்தழிதல், சித்தம் சித்திலே ஒத்தல், கூட்டில் வாட்சார்த்தல், உள்ள முதல் அனைத்தும் ஒன்ற ஒருவ உள்ளம் உருகவந்து உன்னுடனுதல், தெள்ளி உணருமவர் உளராஞல், (அவருள்) என்றும் புணருமவன் (சிவன்) இல்லாப் பொருள் (ஆவன்). ஆதலின், என்றும் புணருமவன் என்றும் இருக்கலாம்படி, தெள்ளியுணருமவர் இலராக வேண்டும்.

"நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நான் அழி" தல். (தற்போதம் அறல்)

1. நல்லசிவதன்மத்தால் நான் அழிதலை விளக்கல் (16-21)
2. நல்ல சிவயோகத்தால் நான் அழிதலை விளக்கல் (22-28)
3. நல்ல சிவஞானத்தால் நான் அழிதலை விளக்கல் (29 முதல்)

பரங்கெட்டார். (21) இவனுகை தானெழிதல் (23) மதியுங்கெடல் (26) தானேபரமாதல் (30) அறிவின் அறிவை அவிழ்த்துக்கொண்ட அறிவின ராய் வாழ்ந்திருத்தல். (32) சார்பு கெடவொழுகல் (34) உன்னில் அவன் உன்னுடனேயாம் (36) கருத்தழியப் பாயும் ஒருமகள் கேள்வன். (35) அரணவுணர்வுதனில் அவ்வுணர்வை மாற்றல் (41) உள்ளும் புறம்பும் நினைப்பொழிதல் (51) அன்பே அன்பாக அறிவு அழிதல் (55) வல்லபடி வாதனையை மாற்றும் வகை, (55) உள் அவர்கள் கூடி உணர்வு ஒழிய நிற்பது (101) எனத் திருவுந்தியாருள்ளும் அதன் உரையாய திருக் களிற்றுப்படியாருள்ளும் 'உள்ளம் உருகல்' ஆவது இன்னது என மிக்க தெளிவும் தெளிந்து நிற்கும் நிலையும் நன்கு விளக்கியவாறுணர்க. இவையெல்லாம் குறிப்பே. இக்குறிப்புக்களின் விளக்கம் எல்லாம் இனி எழுதப்படும்.

பொருளும் மனையும் அறமறந்து
போகம் மறந்து புலன்மறந்து
கருவி கரணமவை மறந்து
காலம் மறந்து கலைமறந்து
தருமம் மறந்து தவம் மறந்து
தம்மை மறந்து தற்பரத்தோடு
உருகி உருகி ஒரு நீர்மையாயே விட்டார் உய்ய வந்தார்.

திருச்சிற்றம்பலம்

சமயபோதனை

பாடம் 1 | வினுக்கள் | மார்ச்சு 1974.

வினுக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவே ஆகும். விடைகளை முழு அளவு (Foolscape size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கத்திற்குள் எழுதி இச்செயலகத்திற்கு 31-3-1974க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

மதிப்பெண் சமம்] [மதிப்பெண் 100

1. ஆண்பனை பெண்பனையானது எவ்வாறு?
2. பொருள்கள் இல்லாமல் மாற்றம் நிகழ்ந்தது என்று பௌத்தம் கூறுவதை எவ்வாறு மறுக்கலாம்?
3. முனையடுவார் எவ்வாறு பொருள் திரட்டினுர்? அப்படிக் கிடைத்த பொருளை என்ன செய்தார்?
4. கணநாதர் சிவனடியார்களை எவ்வெத் திருத்தொண்டுகளில் ஈடுபடுத்தினுர்?
5. இராமாநுசர் எம்பெருமானுர் ஆனது எவ்வாறு?
6. தசகாரியங்கள் என்னென்ன?
7. அவகதையாய் என்று தொடங்கும் சேக்கிழார் புராணப் பாடலின் பொழிப்புரை எழுதுக.
8. "செய்திகள் அறிவாகா!" விளக்கம் தருக.
9. "இன்னெரு மாம்பழத்தையும் கொண்டுவா" என்று பரமதத்தன் சொன்னபோது புனிதவதியார்(காரைக்காலம்மையார்) என்ன செய்தார்?
10. நேச நாயனுர், மனம், வாக்கு, காயம் என்பனவற்றை எவ்வாறு பயன்படுத்தினுர்?

விடைகளை எழுதி உரிய அஞ்சல்தலை யொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும்:—

"அருளோசை"

தமிழ்நாடு தெய்விகப் பேரவை

9, மகாராஜா சூரியராவ் சாலை,

ஆழ்வார்பேட்டை,

சென்னை-600018.

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT ARULOSAI

FORM IV (See Rule 8)

1. Place of Publication	9, Maharaja Surya Rao Road, Madras-600018
2. Periodicity of its Publication	Monthly
3. Printer's Name	A. Narayanaswami, B.A.
(Whether citizen of India)	Yes
(if foreigner, state the country of origin)	......
4. Publisher's Name	A. Narayanaswami, B.A.
(Whether citizen of India)	Yes
(if foreigner, state the country of origin)	......
Address	9, Maharaja Surya Rao Road Madras-600018
5. Editor's Name	A. Narayanaswami, B.A.
(Whether citizen of India)	Yes
(if foreigner, state the country of origin)	......
Address	9, Maharaja Surya Rao Road Madras-600018
Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital	Tamil Nadu Deivika Peravai 9, Maharaja Surya Rao Road Madras-600018

I, A. Narayanaswami hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date 15—3—74

A. Narayanaswami, B.A.
Publisher.

சிவனடியார் வரலாறு :

கணநாத நாயனார்

—:×:—

சிவம் பெருக்கும் பிள்ளையாராகிய திருஞானசம்பந்தர் திருஅவதாரம் செய்த திருத்தலமாகிய சீகாழிப் பதியிலே அவதரித்தவர் கணநாதர். மறையவர் குலத்தைச் சேர்ந்தவர். அவர், திருத்தோணியப்பருக்கு நாள்தோறும் அன்புடன் திருத் தொண்டு செய்து வந்தார்.

தம்மிடம் விரும்பி வந்து அடைபவர்களை அவரவர் தகுதிக்கேற்ப, திருநந்தனவனம் வைத்தல், மலர் கொய்தல், திருமாலைகட்டல், திருமஞ்சனப் பணிசெய்தல், இரவும் பகலும் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், திருமுறை எழுதுதல், திருமுறை வாசித்தல் என இவ்வாருகப் பல திருத்தொண்டுகளைப் பயிற்றுவிப்பார். அத்திருப் பணிகளில் குறையேதுமின்றி விளங்கிடச் செய்வித்து அவர்களை சிவனடியார் ஆக்குவார். அன்போடு கூடிய வாய்மைமிக்க மனையறம் புரிந்து, சிவனடியார்கள் மனம் மகிழும்படியாக அவர்களை வழிபட்டு வந்தார்.

இவ்வாருகப் பெருஞ் சிறப்புப் பெற்ற திருத்தொண்டராகிய கணநாதர், திருஞானசம்பந்தர்பால் கொண்ட பெருவிருப்பால், ஒப்பில்லாத காதலுடன், உள்ளம்மகிழ, திருஞானசம்பந்தர் திருவடிகளை முப்பொழுதும் தவருமல் பெருகிய அன்போடு, அருச்சனை செய்து வழிபட்டு வந்தார்.

திருஞானசம்பந்தரது திருவடிகளை வழுத்தி அருச்சனை செய்வதனல் நலம் பெற்ற கணநாதர், தூய, நறுமணமிக்க கொன்றை மலர்களைச் சூடிய திருமுடியை உடைய சிவபெருமானது உறைவிடமாகிய, நெடிய கயிலை மலையை நண்ணி, அங்கு சிவகணங்களுக்கு நாதராகும் வழித்தொண்டின் நிலைபெற்ருர்.

உலகெலாம் உய்யும்படியாக நஞ்சுண்டவராகிய சிவபெருமானுக்குத் திருத்தொண்டு செய்ததில், உறுதியும் மெய்யுணர்வும் பெற்று, ஒப்பற்ற சிவனடியார்களைச் சிவநெறிப்படுத்தி, அவர்கள் திறத்தை உலகம் புகழுமாருக்கியவரும், பெரும் சிறப்புடைய சீகாழிப்பதியினில் தோன்றியவருமாகிய கணநாதரது கழலிணைகளை வணங்கி வாழ்வாம்.

— பழ. தருமஆறுமுகம்.

நிகழும் பிரமாதீச ஆண்டு பங்குனித் திங்கள் 18-ஆம் நாள் (31-3-71) ஞாயிற்றுக் கிழமை கணநாத நாயனரது திருநட்சத்திரமாகிய திருவாதிரை.